விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-2163)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 05 புதன்கிழமை (19.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 151



## தடைகளைத் தகர்த்தெறிந்து முள்ளிவாய்க்காலில் வேலன் சுவாமிகள் உறவுகளுக்கு அஞ்சலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில், இறுதி யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்ந்து சிவகுரு ஆதீன குரு தவத்திரு வேலன் சுவாமிகள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதேவேளை முள்ளிவாய்க்காலில் பயங்கரவாதத்தைத் தூண்டாத வகையிலும் கொரோனா கட்டுப்பாட்டு நடைமுறைகளை பின்பற்றி அஞ்சலி நிகழ்வை மேற்கொள்ளலாம் என முல்லைத்தீவு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு முதல் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை ஆகிய பொலிஸ் பிரிவுகள் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டு முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

19



## பாலூட்டும் தாய்மார்களுக்கு கொரோனா தடுப்பூசி

(கொழும்பு)

தாய்ப்பால்ஊட்டும்அனைத்து தாய்மார்களும் கொரோனாத் தடுப்பூசி பெற்றுக் கொள்ளத் தகுதி உடையவர்கள் என்று தொற்று

19

## கொரோனா +2,478

(கொழும்பு)

இலங்கையில் மேலும் +2,478 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்

19

### கெடுபிடிகளுக்கு மத்தியில் தமிழர் தாயகத்தில்

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

*(யாழ்ப்பாணம்)*

*பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டதை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகத்தில் பரவலாக இடம்பெற்றன.*

*அரச படையினரின் கடுமையான கெடுபிடிகளுக்கு மத்தியில் அஞ்சலி நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.*

*(19ஆம் பக்கம் பார்க்க)*



## கொரோனாவால் யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ். போதனா

19

## மதுச்சாலையில் வாய்த்தர்க்கம் இளைஞன் குத்திக் கொலை

### முல்லை.சுதந்திரபுரத்தில் சம்பவம்

(முல்லைத்தீவு)

மதுச்சாலையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தில் 25 வயது இளைஞன் ஒருவன் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் முல்லைத்தீவு - சுதந்திரபுரம் கொலனி பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

19


## யாழ்.சுதுமலை அம்மன் கோவில் முடக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுதுமலை அம்மன் கோவில் தற்காலிகமாக முடக்கப்பட்டிருப்பதுடன் திருவிழாவில் கலந்து கொண்டிருந்தவர்கள்

19

## பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



(கொழும்பு)

முள்ளிவாய்க்கால் நினைவுதினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியிலும் நேற்று செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் நினைவு கூரப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக தெரிவித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்

19

## வடமராட்சியில் 38 பேருக்கு தொற்று

### 34 பேர் நெல்லியடி வெதுப்பகத்துடன் தொடர்புடையவர்கள்

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் நேற்று மட்டும் 38 கொரோனாத்

19

### கிளிநொச்சி பொதுச் சந்தையில்

## வெற்றிலைக் கடை உரிமையாளருக்கு தொற்று

### 32 கடைகள் முடக்கப்பட்டன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையில் வெற்றிலைக் கடை உரிமையாளர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியான நிலையில் சந்தையில்

19

## யாழ்ப்பாணத்தில் 91 பேர் உட்பட வடக்கில் 135 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 91 பேர் உட்பட வடக்கில் 135 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றைய தினம் 745 பேருக்கு நடத்தப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ்.மாவட்டத்தில் 91 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 31 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 7 பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் ஒருவருக்குமாக 135 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமபுரம் கண்ணகி நகரில் மரண வீட்டில் பணம், நகை கொள்ளை

(தருமபுரம்)

தருமபுரம் கண்ணகி நகரில் உறவினர்கள்போல் பாசாங்கு செய்து மரண வீட்டில் பணம், நகை கொள்ளையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்ணகி நகரப் பகுதியில் கடந்த 13 ஆம் திகதியன்று மரணச்சடங்கு நடைபெற்றுள்ளது. இதில் உறவினர் போல் பாசாங்கு செய்து கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த கணவன், மனைவி இருவரும் வீட்டில் உள்ள அலுமாரியினைத் திறந்து அதிலிருந்த ஐந்து இலட்சம் ரூபாய் பணத்தையும் ஒரு பவுண் தங்க நகையினையும் கொள்ளையடித்துக் கொண்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

பின்னர் மரணச் சடங்கு முடிவுற்றபின் வீட்டு அலுமாரியினை திறந்தபோது பணம், நகை இல்லாததை அறிந்த உறவினர்கள் தேடியபோதும் கிடைக்கவில்லை. பின்னர் சந்தேகம் கொண்டு தருமபுரம் பொலிஸாரிடம் முறைபாடு பதிவு செய்தனர்.

விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் கண்காணிப்பு கமரா மூலம் திருடர்களை இனங்கண்டதுடன் நேற்றைய தினம் குறித்த கணவன், மனைவி இருவரையும் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாத தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கின் சிலிகேரத் தெரிவித்தார். (ம-3,316)

# தொற்றாளர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்தைக் கடக்கும்

## பிரதி சுகாதாரப் பணிப்பாளர்

(கொழும்பு)

கோவிட்-19 நோயாளர்கள் பதிவாகின்றதை அவதானிக்கையில், 100 நாட்களை அடையும்போது, தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனை விடவும் அதிகரிக்கக்கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார். (ம-03)

# தூபியில் விளக்கேற்ற சென்ற சிவாஜிலிங்கம் தடுக்கப்பட்டார்

## கைது செய்வோம் என பொலிஸாரால் மிரட்டி திருப்பி அனுப்பப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்தவர்களின் நினைவாக கட்டப்பட்டுள்ள தூபியில் விளக்கேற்றச் சென்ற சிவாஜிலிங்கத்தை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தி அட்டகாசம் புரிந்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு நாளை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத் தூபியில் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சுடரேற்ற முயன்றபோது அங்கு கடமையில் இருந்த இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர்.

அதனையும் மீறி தூபி இருந்த வளாகத்தினுள் சென்று சிவாஜிலிங்கம் விளக்கேற்ற முயன்றபோது, சப்பாத்து கால்களுடன் இராணுவத்தினர் அதனுள் சென்று சுடரேற்றவிடாது சிட்டிகளை பறிக்கவும் அதனை தட்டிவிடவும் முயன்றனர்.

அதனால் அவ்விடத்தில் இராணுவத்தினருக்கும் சிவாஜிலிங்கத்திற்கும் இடையில் நீண்ட வாய்த்தர்க்கம் ஏற்பட்டு பின்னர் அவ்விடத்திற்கு வந்த பொலிஸார், சிவாஜிலிங்கத்தின் அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின் பிரகாரம் இன்றைய தினம் (நேற்று) வெளியில் செல்ல முடியாது எனவும் அதனால் கொரோனா நோய் சுகாதாரக் கட்டுப்பாடுகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்வோம் என மிரட்டி அனுப்பி உள்ளனர். (ம-03,33)

# உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு மறுத்தல் குற்றமாகும்

## முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் ஜஸ்மின் சூக்கா அறிக்கை

(கொழும்பு)

உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு மறுத்தல் ஒரு குற்றமாகும்.

இலங்கையின் கொலைக் களங்களில் இறந்த பல்லாயிரக் கணக்கானவர்களை நாம் நினைவு கூருகின்றோம் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் தலைவர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

12 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வில் உலகம் முழுவதிலுமுள்ள தமிழ் சமூகத்துடன் நாம் இணைந்து கொள்கின்றோம்.

குறிப்பாக தமது அன்புக்குரியவர்களை இழந்து உயிர் தப்பியவர்கள், மெனிக் பாமிலும் புனர்வாழ்வு முகாம்களிலும் சிறைவைக்கப்பட்டிருந்தவர்களின் வேதனையையும் துன்பத்தினையும் நாங்கள் ஆழமாக உணர்ந்து கொள்கின்றோம்.

சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை ஆகியன இந்த முகாம்களில் பொதுவாகவே இடம்பெற்றது என்பதும் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்தவர்களால் இது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது என்பது எமக்கு இப்போது தெரியும்.

நாம் துக்கம் கடைப்பிடிக்கும் அதேவேளையில் தமது அன்புக்குரியவர்களை தொடர்ந்தும் தேடிவரும் அத்துடன் இலங்கைப் பாதுகாப்பு படைகளால் அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையினை அறிந்து கொள்வதற்காக ஏங்கிக் கிடக்கும் காணாமற்போனவர்களின் தாய்மார்களின் வேண்டுகோளையும் நாம் நினைவிற் கொள்கின்றோம்.

இந்த வாரம், பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் ஒரு நினைவுச் சின்னத்தை நிறுவுவதற்கு தயாராகிக்கொண்டிருந்தார்கள். இந்தக் கருங்கல்லில் செய்யப்பட்ட நினைவுக்கல் இரவோடிரவாக காணாமற்போயுள்ளதுடன் 10 வருடகால பழைய நினைத்தூபியும் அழிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நினைவுத்தூபியானது வடக்கு மற்றும் கிழக்கில் 20,000 இற்கும் மேலான கல்லறைகளைக் கொண்ட 25 பாரிய மயானங்கள் நினைவாக இந்த நினைவுத் தூபி கட்டப்பட்ட நிலையில் இந்த அழிப்பானது குறிப்பாக பாதிப்பு மிக்கதாக உள்ளது.

பாதிக்கப்பட்டவர்களை தமது அன்புக்குரியவர்களுக்காக துக்கம் அனுஷ்டிக்கவும் , நினைவு கூருவதற்கும் மறுத்தல் ஒரு குற்றமாகும். அத்துடன் இது இலங்கையிலுள்ள சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்நோக்கியுள்ள அடக்குமுறை நிலைமையை காட்டுகின்றது. போர் முடிவடைந்து 12 வருடங்கள் கடந்துவிட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின்
வணிகக்கல்விப் பாட ஆசிரியையும்
ஆசிரியர் கழகத் தலைவருமான
திருமதி **சா. சிவநாதன்** அவர்களின்
அன்புத் தந்தையார்
**அமரர்**
**பொ. தர்மலிங்கம்**
அவர்கள் இறைபதமடைந்த
செய்திகேட்டு நாமும்
துயரடைவதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
(C-2171)
ஆசிரியர் கழகம்
யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பளை

கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி **செல்வராணி**
**அர்ச்சுணன்**
அவர்களின் அன்புத் தாயார்
அமரர் **லக்சுமிஅம்மா**
**கிருஸ்ணபிள்ளை**
அவர்கள் காலமான செய்தியறிந்து
ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின்
பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிராா்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



தோற்றம் 17.08.1942
மறைவு 17.05.2021
ஆசிரியர் ஊழியர் நலன்புரிச் சங்கம்
யா/கனகரத்தினம் ம.ம.வி.
(6902)

கண்ணீர் அஞ்சலி
எமது நண்பர்களான **ந. நிமலன்**
மற்றும் **ந. விமலன்** ஆகியோரின்
அன்புத் தாயார்
திருமதி
**கிருசாம்பாள்**
**நவரத்தினசிங்கம்**
அவர்கள் இறையடி
சேர்ந்ததையிட்டு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை
அன்னாரின் குடும்பத்திற்கு
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



மலர்வு : 14.11.1942
உதிர்வு : 18.05.2021
A/L 1995 மத்தியின் மைந்தர்கள்
யாழ். மத்திய கல்லூரி
(6903)

மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம், 1977, உத்திரட்டாதி, கி.பா. 17, உயரம் 5' 2", சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.
நேரடித் தொடர்பிற்கு
076 449 6275
(6901)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணுக்குள் உடலாலும் விண்ணுக்குள் உயிராயும் உறங்கும் அத்தனை உறவுகளையும் நினைந்து...



முள்ளிவாய்க்கால் படுகொலையின் 12ஆவது ஆண்டு நினைவு நாளான நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் அலுவலகத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## நீதி கிடைக்கும் வரை போராடுவோம்




முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று யாழ்.மாநகர சபையில் அனுஷ்டிக்கப்பட்டது. உறவுகளுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் முதல்வர் கருத்து தெரிவிக்கையில், உயிரிழந்த எமது உறவுகளுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலி என்பது அவர்களது இழப்புக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதாகும். நீதி கிடைக்கும் வரை ஓயாது போராட நாம் உறுதி பூணுவோம் என தெரிவித்தார்.

### யாழ். பல்கலைக்கழகத்தில்

## தடைகளை தகர்த்து சுடரேற்றி அஞ்சலி

வேந்தல் நிகழ்வுகளை தடுக்கும் நோக்குடன் நேற்று முன்தினம் முதல் பல்கலைகழக சூழலில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கடும் கண்காணிப்புக்கள் , தடைகளை மீறி மாணவர்கள் பல்கலை வளாகத்தினுள் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவு சின்னம் முன்பாக சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.



யாழ்.பல்கலை. வளாகத்தினுள் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னம் முன்பாக சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினை



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் உயிரிழந்த உறவுகளுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்திலேயே அஞ்சலி நிகழ்வினை மேற்கொண்டிருந்தார்.

## வலி.கிழக்கு பிரதேச சபையில் உணர்வுபூர்வ அஞ்சலி



வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றுக் காலை ஈகச் சுடரேற்றப்பட்டு உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

பிரதேச சபை வளாகத்தில் உள்ள நினைவேந்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் சிவப்பு மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டு இன ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### யூனியன்குளத்தில்...




## கரைச்சி பிரதேச சபையில் நினைவேந்தல்



கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

படங்கள்: ரவிசாந், தேவானந்த், சப்தசங்கரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலி ஓபன் டென்னிஸ் சம்பியன் பட்டத்தை வென்ற நடால், ஸ்வெய்டெக்




ரோமில் கடந்த ஞாயிறு நடைபெற்ற இத்தாலி ஓபன் ஆண்கள் ஒற்றையர் பிரிவுக்கான இறுதி ஆட்டத்தில் முதல் நிலை வீரரான செர்பியாவை சேர்ந்த நோவக் ஜோகோவிச்சும், ஸ்பெயினை சேர்ந்த மூன்றாம் நிலை வீரரான ரபேல் நடாலும் மோதினர்.

2 மணி நேரம் 49 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் 7-5, 1-6, 6-3 என்ற செட் கணக்கில் நடால் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடரில் நடால் வெல்லும் 10 ஆவது பட்டம் இதுவாகும்.

இதேவேளை பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் போலந்தின் இகா ஸ்வெய்டெக்கும் செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவாவும் மோதினர்.

ஆட்டத்தின் இறுதியில் கரோலினா பிளிஸ்கோவாவை 6-0, 6-0 என்ற செட் கணக்கில் வீழ்த்தி இகா ஸ்வெய்டெக் இத்தாலிய ஓபன் பட்டம் வென்றார். (6-4-6)

## நியூசிலாந்து டெஸ்ட் தொடரிலிருந்து ஜோஃப்ரா ஆர்ச்சர் விலகல்

நியூசிலாந்துக்கு எதிராக அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கெடுக்கும் வாய்ப்பினை இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜோஃப்ரா ஆர்ச்சர் நழுவ விட்டுள்ளார்.

ஜோஃப்ரா ஆர்ச்சரின் முழங்கையில் ஏற்பட்டுள்ள வலி காரணமாகவே அவர் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாக இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியம் கடந்த ஞாயிற்றுக்கிழமை உறுதிப்படுத்தியது. (4-6-8)

## இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளர் இருவர் விலகல்

இலங்கை கிரிக்கெட் அணிக்கெதிரான ஒருநாள் தொடரிலிருந்து இரு முக்கிய வேகப்பந்து வீச்சாளர்கள் விலகியுள்ளனர்.

முதுகில் காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர்களான ரூபல் ஹொசைன் மற்றும் ஹசன் மஹ்மூத் ஆகியோர் இத்தொடரிலிருந்து விலகியுள்ளனர்.

அத்துடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்களாதேஷ் சகலதுறை வீரரான ஷகிப் அல்ஹசன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

ஷகிப் அல் ஹசன், மூன்றாவது இடத்தில் களமிறங்குவார் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி, எதிர்வரும் 23 ஆம் திகதி டாக்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது. (4-6-8)

## இருபது-20 உலகக்கோப்பையில் மலிங்கா இடம்பிடிப்பாரா?

இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கா. டெஸ்ட், ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வுபெற்ற மலிங்கா இருபது-20 கிரிக்கெட்டில் மட்டும் விளையாடி வருகிறார். எல்லா நாடுகளும் இருபது-20 உலகக்கோப்பைக்கான அணியை தேர்வு செய்வதில் தயாராக உள்ளன. ஆனால் இலங்கை அணியில் மலிங்கா இடம் பெறுவாரா? என்பதை தேர்வாளர்கள் உறுதி செய்ய முடியாமல் இருக்கின்றனர்.

இதுகுறித்து இலங்கை அணி தேர்வு குழுவில் இடம் பிடித்துள்ளவர்களில் ஒருவரான பிரமோத்யா விக்ரமசிங்கே கூறுகையில், "மலிங்கா சிறந்த கிரிக்கெட் வீரர், அவருடைய சேவை எப்போதுமே அணிக்கு முக்கியமானது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், அனைத்து வீரர்களும் எங்களுக்கு ஒரே மாதிரித்தான். தேர்வில் ஒரே மாதிரியான வழிகாட்டு நெறிமுறைகளைத் தான் பயன்படுத்துவோம்.

நான் மலிங்காவை தொடர்பு கொண்டு, இந்த வருடம் நடைபெறும் இருபது-20 உலகக்கோப்பையில் விளையாடும் நம்பிக்கை உள்ளதா? என்றேன். அவர் என்னிடம், கடந்த ஒன்றிரண்டு ஆண்டாக போட்டி கிரிக்கெட்டில் விளையாடவில்லை என்று தெரிவித்தார்.

மேலும் அவரிடம் நான், ஒரு வீரர் உள்நாட்டு தொடரில் விளையாடினால்தான் தேசிய அணித்தேர்வு தகுதியானவர் எனத் தெரிவித்தேன். மலிங்கா இதை நிறைவேற்றினால் அந்த நேரத்தில் அணியில் சேர்ப்பது குறித்து ஆலோசிக்கப்படும்.

மலிங்கா எங்களுடைய தேர்வு கொள்கையை குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். இதை அப்படியே தொடருங்கள் என்றார். எனினும், இருபது-20 கிரிக்கெட்டில் விளையாடுவது அல்லது விளையாட விரும்பவில்லை என்பது குறித்து தெளிவாக பதில் அளிக்கவில்லை" என்றார் என அவர் தெரிவித்தார்.(8-4)

## சிட்னியை வந்தடைந்த அவுஸ்திரேலிய வீரர்கள்

2021 ஐ.பி.எல். தொடரில் பங்கேற்று, மாலைதீவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பெரும்பாலான அவுஸ்திரேலிய வீரர்களை ஏற்றிச் சென்ற விமானம் சிட்னியில் தரையிறங்கியுள்ளது.

இந்தியன் பிரீமியர் லீக்கில் பங்கெடுத்த வீரர்கள், அதிகாரிகள் மற்றும் வர்ணனையாளர்களில் 38 பேர் கொண்ட அவுஸ்திரேலிய குழுவில் பெரும்பான்மையானவர்கள் மாலைதீவிலிருந்து புறப்பட்டு நேற்று முன்தினம் காலை சிட்னி விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளனர்.

தரையிறங்கிய பின்னர் வீரர்கள் சிட்னியில் உள்ள ஹோட்டலில் 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்காக பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கொவிட் நோயாளர்களின் அதிகரிப்பைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து பயணிகளின் வருகையை அவுஸ்திரேலியா தடைசெய்ததை அடுத்து நாட்டுக்கு திரும்ப முடியாத அவுஸ்திரேலிய கிரிக்கெட் குழுவினர் மாலைதீவில் மே 6 முதல் தனிமைப்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (8-4)

## அட்லெடிகோ மாட்ரிட் அணி சம்பியன் பட்டத்தை நெருங்கியது

லா லிகா கால்பந்து போட்டியில் 25 ஆவது வெற்றியை ருசித்த அட்லெடிகோ மாட்ரிட் அணி சம்பியன் பட்டத்தை நெருங்கியது.

20 முன்னணி கிளப் அணிகள் இடையிலான லா லிகா கால்பந்து போட்டி ஸ்பெயினில் நடந்து வருகிறது. இந்தப் போட்டி தொடர் விறுவிறுப்பான இறுதிக் கட்டத்தை எட்டி விட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மாட்ரிட்டில் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் முன்னாள் சம்பனான அட்லெடிகோ மாட்ரிட் ஒசாசுனா அணியை எதிர்கொண்டது.

அட்லெடிகோ மாட்ரிட் அணி 2-1 என்ற கோல்கணக்கில் ஒசாசுனாவை வீழ்த்தியது. இந்த வெற்றியின் மூலம் அட்லெடிகோ மாட்ரிட் அணி சம்பியன் பட்டத்தை நெருங்கியது.


இதுவரை நடந்த லீக் ஆட்டங்கள் முடிவில் அட்லெடிகோ மாட்ரிட் அணி 25 வெற்றி, 8 சமநிலை, 4 தோல்வியுடன் 83 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் தொடருகிறது. ரியல் மாட்ரிட் அணி 24 வெற்றி, 9 சமநிலை, 4 தோல்வியுடன் 81 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தில் இருக்கிறது. இன்னும் ஒரு ஆட்டம் மட்டுமே எஞ்சி இருக்கும் நிலையில் சம்பியன் பட்டத்தை வெல்வதில் இவ்விரு அணிகள் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும் கடைசி லீக் ஆட்டத்தில் அட்லெடிகா மாட்ரிட் வல்லாடோலிட் அணியையும் ரியல் மாட்ரிட், வில்லா ரியல் அணியையும் சந்திக்கிறது. இந்த ஆட்டத்தின் முடிவைப் பொறுத்தே சம்பியன் பட்டத்தை வெல்வது யார்? என்பது தெரியவரும். 2 புள்ளி வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கும் அட்லெடிகா மாட்ரிட் அணி பட்டம் வெல்ல அதிக வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. (4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறைக்கெதிரான போராட்டங்கள் தோற்றுப்போனதாய் வரலாறு இல்லை

## முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் எடுத்துரைப்பு



**(யாழ்ப்பாணம்)**

**முள்ளிவாய்க்கால் எமதினத்தின் இதயம். ஒவ்வொரு ஆண்டும் சிங்கள-பௌத்த அரசு தனது அரச இயந்திரத்தைப் பயன்படுத்தி நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுத்து வருவதோடல்லாமல் நினைவேந்தலை நிறுவனமயப்படுத்தவிடக்கூடாது என்பதில் கவனமாய் இருக்கின்றது. அதனால்தான் நினைவுத்திடலை பெயரிட எடுத்த முயற்சிகளைத் தனது இராணுவக்கரம் கொண்டு நசுக்கியிருக்கின்றது. இதனை விடவும் நாங்கள் இறந்தவர்களை நினைந்து சுடரேற்றும் புனித இடத்தை மாசுபடுத்தி அழித்திருக்கின்றது. இவ்வாறான இராணுவ அடாவடித்தனங்கள் எமதினத்தின் அடக்குமுறைக்கெதிரான விடுதலை வேட்கையை மேலும் உறுதிப்படுத்துமே தவிர நலிவடையச் செய்யப்போவதில்லை என வடக்கு-கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பிரகடனத்தில் தெரிவித்துள்ளது.**

அப்பிரகடனத்தில் மேலும், முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழர்களை 'ஈழத்தமிழ்த் தன்மையில்' ஒருங்கிணைக்கும் தேசிய விடுதலையின் மையப்புள்ளியாகும். ஈழத் தமிழர்களுக்கென்று நினைவுகூரல் பண்பாட்டுப் பாரம்பரியம் உண்டு. எங்களோடு வாழ்ந்து இறந்து போனவர்களை இன்றும் எம் வீடுகளிலும் பொது பொதுவெளிகளில் நினைவு கூருகின்றோம். இறந்தவர்களின் படங்களுக்கு மாலையிட்டு, விளக்கேற்றி அவர்களுடைய சுவாச இருப்பை தக்க வைத்துக் கொள்கின்றோம். அவர்கள் இறந்த காலத்திற்குரியவர்களாக இல்லாமல் எம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்களாகக் கருதும் நம்பிக்கையில்தான் ஈழத் தமிழர்களது நினைவுகூரல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

அவர்களுடைய கனவுகள் எப்போதும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கனவுகளைச் சுமந்துதான் அடுத்த தலைமுறை உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட எமது சொந்தங்கள் ஒவ்வொருவரும் எம்மினத்தின் மூச்சாக வாழ்ந்தவர்கள். சிங்கள-பௌத்த அடக்குமுறைக்கெதிராக ஈழத்தமிழினம் என்றோ ஒருநாள் சுதந்திரத்துடன் வாழும் என்ற கனவுடன் மூச்சடங்கிப் போனவர்கள். முள்ளிவாய்க்கால் ஒரு தோல்வியின் புள்ளியல்ல, சிங்கள-பௌத்த அரசு முள்ளிவாய்க்காலை, தமிழர் விடுதலைப் போராட்டத்தின் ஒரு தோல்வியின் முடிவாகவே கட்டமைக்க முயல்கின்றது. முள்ளிவாய்க்கால் சிங்கள-பௌத்த அடக்குமுறைக்கெதிராக தொடர்ந்தும் எழவேண்டிய வரலாற்றுக் கடமையை, பட்டறிவினூடு உணர்த்திய வரலாற்றுத் திருப்புமுனையாகும்.

அடக்குமுறைக்கெதிரான போராட்டங்கள் தோற்றுப் போனதற்கான உண்மைகள் உலகில் எங்கும் இல்லை. வரலாற்றுப்பக்கங்களில் விடுதலைப் போராட்ட அணுகுமுறைகள் பின்னடைவுகளைச் சந்தித்திருக்கின்றன.

விடுதலைப் போராட்டத்தை வெற்றி, தோல்வி என்ற இருமை முறையியலுக்குள் வைத்து ஆராய முற்படுவது வரலாற்று அபத்தம். அதைத்தான் சிங்கள-பௌத்த அரசு செய்து வருகின்றது.

வடக்கு-கிழக்கில் இராணுவ மயமாக்கலை நீட்சிப்படுத்தி, பயங்கரவாதம் என்ற போர்வையில் வடக்கு-கிழக்கு மக்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்கி, அச்ச மனநிலைக்கூடாக மக்களை ஆள, கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முயற்சிக்கின்றது. அதையே மக்கள் கிளர்ச்சிக்கு எதிரான உத்தியாகவும் ஆயுதமாகவும் பயன்படுத்துகின்றது.

பின் முள்ளிவாய்க்கால் வரலாற்றில் இரத்தமற்ற ஆக்கிரமிப்புப் போரை சிங்கள-பௌத்த அரசு வடக்கு-கிழக்கில் கட்டவிழ்த்து விட்டுள்ளது. அப்போரின் பரிமாணங்கள் நில அபகரிப்பாகவும், சிங்கள-பௌத்த காலனித்துவ மயமாக்கலாகவும் ஈழத்தமிழ் குடிசனப் பரம்பலை மாற்றியமைத்து பிரதிநிதித்துவத்தை சிக்கலுக்குட்படுத்துவதாகவும் இலங்கையின் பெரும்பான்மை ஒற்றைப் பண்பாட்டை அங்கீகரிப்பதாகவும் சிங்கள-பௌத்த ஏகாதிபத்தியத்தை தக்க வைத்துக் கொண்டு மகாவம்சத்தில் வாக்களிக்கப்பட்ட தேசத்தை அடையும் இலக்கை கொண்டதாகவும் அமைந்திருக்கின்றன.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு ஈழத்தமிழர்கள் சர்வதேச விசாரணை மூலமே நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும் பட்டறிவிலும் தொடர்ந்து சர்வதேச விசாரணைக்கான பரிந்துரைகளை மேற்கொண்டு வருகின்றனர். சிங்கள-பௌத்த அரசு உள்ளக விசாரணையை மட்டுமே வலியுறுத்தி வந்துள்ளது. ஈழத்தமிழர்களுடைய வரலாற்றுப் பட்டறிவின் அடிப்படையில் உள்ளக விசாரணை ஈழத்தமிழர்களுக்கு ஒருபோதும் நீதியைப் பெற்றுத்தரப் போவதில்லை என்பது திண்ணம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கையை வெறுமனே நிகழ்ச்சித் திட்டத்திற்காக வைத்து தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை அருகிப் போகின்றது.

இலங்கையை ஐ.நா. பொதுப் பேரவைக்கு பாரப்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் ஊடாக மட்டும் நீதியைப் பெற முடியும் என்ற ஈழத் தமிழர்களின் கோரிக்கைக்கு சர்வதேச சமூகம் மதிப்பளிக்க வேண்டும்.

நினைவுகூரல் என்பது அடிப்படை மனித உரிமை. அடிப்படை மனித உரிமைச் சாசனத்தின் வரலாற்றுப் பின்புலம் இனப்படுகொலைகளின், பாரிய மனித உரிமை மீறல்களின் அடிப்படையைக் கொண்டிருக்கின்றது. மனித உரிமைச் சாசனத்தில் நினைவுகூரலை, ஓர் உரிமையென வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் அந்த உரிமை எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்றது.


ஈழத்தமிழர் விடுதலை, தமிழினத்தின் சமபலக் கட்டமைப்பில்தான் தங்கியுள்ளது. சமபலக் கட்டமைப்பு, சமூக கட்டமைப்புக்களைப் பலப்படுத்தி தன்னிறைவை நோக்கிய நகர்வில், உள்ளக முரண்பாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு மக்கள் சக்தியை பேரியக்கமாக கட்டியெழுப்புவதில்தான் ஈழத்தமிழர்களின் அடுத்தகட்ட நகர்வு தங்கியுள்ளது.

சர்வதேச சமூகம் ஈழத் தமிழர்களின் நலன்கருதி மட்டும் செயற்படுமா? என்பது சந்தேகத்திற்குரியது. ஆனால் உலக, பிராந்திய ஒழுங்குகளைக் கருத்தில் கொண்டு, புவிசார் அரசியல் சாணக்கிய உத்திகளை ஈழத்தமிழர் பயன்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளதை மறுக்க முடியாது.

ஏகாதிபத்திய போட்டி, அரசியல் புதிய ஒழுங்காக அமைகின்றபோது, வடக்கு-கிழக்கின் பிராந்திய அமைவிடம் முக்கியத்துவம் பெறுகின்றது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, ஈழத் தமிழ்த் தன்மையில் ஒன்றுபட்டு பயணிப்பது வரலாற்றுக் கட்டாயமாகும் என அவ்வறிக்கை தொடர்ந்து செல்கிறது. (நி-4)

## மன்னாரில் அஞ்சலி நிகழ்வு



தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களை நினைவுகூர்ந்து உப்புக் கஞ்சி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(படம்: ஜோசப்நயன்)

## வவுனியாவில் அஞ்சலி



(படம்: சதீஸ்)

வவுனியா தமிழ்விருட்சம் அமைப்பு மற்றும் கருமாரி அம்மன் கோவில் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் மண்ணில் மரணித்த தமிழ் மக்களிற்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு குட்செட் வீதி கருமாரி அம்மன் கோவிலில் நேற்று இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த வங்கியினரின் அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**இரத்த வங்கிகளில் இரத்தத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இரத்தம் வழங்கி உதவுமாறு இரத்த வங்கிப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

பயணக்கட்டுப்பாடுகள் காரணமாக பல இரத்ததான முகாம்கள் இரத்தாகிவிட்டன. இந்நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு பொது வைத்தியசாலைகளின் இரத்த வங்கிகளிலும் இரத்தத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.



எனவே குருதிக் கொடையாளர்கள் மற்றும் புதிதாக இரத்ததானம் வழங்க ஆர்வமுள்ளவர்கள் உடனடியாகத்தங்களுக்கு அருகிலுள்ள இரத்த வங்கிக்குச் சென்று இரத்தம் வழங்கி உதவுமாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை ஐந்து பேருக்கு மேற்படாத குழுக்களாக உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இரத்த வங்கிப் பிரிவுகளுக்கு நேரடி யாகச் சென்று இரத்ததானம் வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5-4-18)

# வாகன வருமான வரி செலுத்தல் தற்காலிகமாக இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய கொரோனாத் தொற்று நிலையைக் கருத்திற் கொண்டும் பொதுமக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் நோக்கிலும் வாகன வருமான வரி செலுத்தும் செயற்பாடானது 18.05.2021 தொடக்கம் 30.05.2021 ஆம் திகதி வரை வடமாகாணத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இக்காலப் பகுதியில் (18.05.2021-30.05.2021) காலாவதியான வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் செலுத்துபவர்களுக்கான தண்டப்பணம் மட்டும் அறவிடப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ் விடயம் தொடர்பாக போக்குவரத்துப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என வடமாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் திருமதி.சி.சுஜீவா அறிவித்துள்ளார். (5)



புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வருடாந்த திருநாளை முன்னிட்டு மேற்படி ஆலய இளையோர் மன்றத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலய முன்றலில் நடைபெற்றது. இந்த இரத்ததான முகாமில் 35 பேர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். (படம்:- ரவிசாந்)

# விபத்தில் வாகனங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டியும் காரும் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து பற்றி மேலும் தெரியவருகையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு நோயாளியை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸும், காரும் புதிய சந்தைப் பகுதியில் விபத்துக்குள்ளாகின. இதில் வாகனங்கள் இரண்டும் பலத்த சேதங்களுக்குள்ளாகின. (5-60)

# விருது வழங்கல்

(யாழ்ப்பாணம்)

பண்டிதர் பொன்.சுகந்தனின் தந்தையான அமரர். ச.பொன்னம்பலத்தின் ஞாபகார்த்த விருது இம்முறை க.பொ.த.உ.தரப் பரீட்சையில் (2020) 2AB பெறுபேறு பெற்ற முற்றாகப் பார்வை இழந்த மாணவியான ஜெயராசன் லோகேஸ்வரிக்கு வழங்கப்படவுள்ளது.

இந் நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் சுன்னாகம் வாழ்வகத்தில் இடம் பெறும். (5)



தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி-வேலம்பிராய் வீதியை காப்பெற் வீதியாக மாற்றும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (படம்:-சுபேசன்)

# மூடப்பட்டது பரு.மீன் சந்தை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மீன் சந்தை சுகாதாரப் பகுதியினரால் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டமை பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் கண்டறியப்பட்டதனை அடிப்படையாகக் கொண்டு பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியினால் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

நாட்டில் கொவிட்-19 நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக சந்தைகளுக்கு இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையை அடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (5-4-33)




கணபதி அறக்கட்டளை அமைப்பின் நிர்வாகி கணபதிப்பிள்ளை கண்ணனின் (சுவிஸ்) நிதிப் பங்களிப்பில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை கொரோனா சிகிச்சை விடுதிக்கு 55 ஆயிரம் ரூபாய் பெறுமதியான குளிர்சாதனப் பெட்டி வழங்கப்பட்டது. (5-4-60)

# யாழ்.பல்கலை.ஆசிரியர் சங்கத்தின் இணையவழி உரையரங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் சங்கம் நடத்தும் “பல்கலைக்கழகமும் சமூகமும்” எனும் கருப் பொருளிலானஉரையரங்கம் இன்று 19 ஆம் திகதி புதன் கிழமை மாலை 7 மணிக்கு இணைய வழியூடாக இடம் பெறவுள்ளது.

இவ் உரையாடலினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவரும் மெய்யியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான ந.சிவகரனின் ஒருங்கிணைப்பிலும் தலைமையிலும் இடம்பெற [illegible] பெருந்தொற்றுடன் எதிர்காலத்திற்கான புதிய இயல்பு வாழ்க்கை” எனும் தலைப் பில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பா ளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி றா.சுரே ந்திரகுமாரன் மற்றும் கனடா McMaster பல்கலைக்கழ கத்தின் மருத்துவபீட உதவிப் பேராசிரியர் வைத்திய கலா நிதி வரகுனன் ஆகியோர் பங்கேற்று கருத்துரைகளை பகிரவுள்ளனர்.

கொரோனா பெருந் தொற்றினால் சமூகத்தின் பல்வேறு கட்டமைப்புகளும் முடக்கம் கண்டிருக்கும் தற்போதைய சூழலில் நேரடியாக பங்கேற்க முடியாத சந்தர்ப்பத்திலும் இணைய வழியாக Zoom செயலி ஊடாக இந்நிகழ்வானது நடைபெறவுள்ளது.

இந்த உரையரங்கில் Meeting ID: 828 322 6454 என்ற அடையாளத் தரவை அளிப்பதனூடாக Join Zoom Meeting http// learn.zoom.us/j/82832 26454 உள் நுழை ந்து பார்வையிடலாம் என யாழ். பல்கலைக்கழக ஆசிரி யர் சங்கச் செயலாளர் இ.பிரசாந்தன் அறிவித்துள்ளார். (5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற அமர்வுகளில் றிசாத், பிரேமலால் பங்கேற்பு





(கொழும்பு)

பாராளுமன்ற சபை அமர்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 20ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களுக்கு இடையிலான கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான றிசாத் பதியுதீன் மற்றும் பிரேமலால் ஜயசேகர ஆகியோரை பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அனுமதியளித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய பாராளுமன்ற அமர்வுகளில் இருவரும் கலந்து கொண்டனர். (நி)

# அரச பணியாளர்களுக்கு வெள்ளிக்கிழமை கொடுப்பனவு

(கொழும்பு)

அரச பணியாளர்களுக் கான இம்மாத கொடுப்ப னவை உரிய தினத்துக்கு முன்னதாக வழங்க தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரச ஊழியர்களுக்கான இம்மாத கொடுப்பனவு, நாளை மறுதினம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழங்கப்படும் என நிதியமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

நாட்டின் கொவிட் பரவல் நிலைமையால் விதிக்கப் படும் நடமாட்டக் கட்டுப்பாடு மற்றும் ஏப்ரல் மாதத்துக்கான கொடுப்பனவு, சிங்கள - தமிழ் புத்தாண்டிற்கு முன்னதாக வழங்கப்பட்டமை ஆகிய காரணங்களை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# தேவையின்றி வெளியே வரவேண்டாம்

## வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

தவிர்க்க முடியாத தேவைகளுக்காக அன்றி, பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியேற வேண்டாம் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

வெசாக் பண்டிகை முடியும் வரை பொதுமக்கள் பயணக் கட்டுப்பாடுகளைப் பேண வேண்டும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ இந்தக் கோரிக் கையை முன் வைத் துள் ளார். பொது மக்களின் ஆதரவு கொரோனா பரவல் மற்றும் உயிரிழப்புகளைத் தவிர்த்துக்கொள்ள உதவியாக அமையும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# 24 மற்றும் 25 அரச விடுமுறை

| Sun | Mon | Tue | Wed | Thu | Fri | Sat |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் 24 மற்றும் 25ஆம் திகதிகள் அரச விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பான அறிவிப்பை பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ளார். (நி)

# சில உறுப்புரைகள் அரசியலமைப்பிற்கு முரண்

## உயர் நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தின் சில உறுப்புரைகள் அரசியலமைப்புக்கு முரணாக உள்ளதென உயர்நீதி மன்றம் அறிவித்துள்ளதாக சபா நாயகர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அரசியலமைப்புக்கு முரணாக உள்ள உறுப்புரைகளை திருத்தம் செய்தால் அல்லது வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றினால் அச்சட்டமூலத்தை செல்லுப்டியாக்க முடியும் என்றும் உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

எனவே அவற்றுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு தேவையாக இருப்பதால், குறித்த உறுப்புரைகள் தொடர்பில் சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித் துள் ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 29 ¼ செவ் 2 சூரி12 இல்<br>உயரம்:168cm<br>தகைமை/தொழில்: A/L மொத்தவியாபாரம்<br>எதிர்பார்ப்பு:வெளிநாட்டில் PR உள்ள மணமகளை எதிர்பார்க்கிறோம்,உள்நாடும்<br>தொ.இ: B/979 | பிறப்பு: 1969 இந்து நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 46செவ் 4சூரி 12இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:. B.A.அரச ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில், உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/5055 |
| பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 50 ¾ செவ் 12 சூரி6 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு:படித்தபெண்,உள்நாடுமட்டும்<br>தொ.இ: B/999 | பிறப்பு:1986 இந்து நட்சத்திரம்:மூலம்<br>கி.பா:26செவ் 12 சூரி2 இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:Bachelor of Management, Work- Assi Accountant<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசாங்க உத்தியோகம், வெளிநாடு (U.K,Australia)<br>தொ.இ:G/5065 |
| பிறப்பு:1963 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி.பா: 15 ¼ செவ் 11 சூரி4 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: பான்சிக்கடை<br>எதிர்பார்ப்பு:படித்தபெண்,உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/1031 | பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா:32 செவ்1 சூரி12 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:மணமகள் விவாகரத்தானவர் (கணவர் இறப்பு 1 வருடத்திற்குள்)<br>தொ.இ:G/5070 |
| பிறப்பு:1972 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 31 ¼ செவ் 3சூரி 1இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:ஆய்வுகூட உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:அரசாங்க உத்தியோகம், உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/1064 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி.பா:30 ¼ செவ்,சூரி1 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: BSC,Junior Executive<br>எதிர்பார்ப்பு: பொறியிலாளர், வைத்தியர், உயர் தொழில் தகைமை,வெளிநாடும் பார்க்கலாம்<br>தொ.இ:G/5072 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. துரைரட்ணசிங்கம் காலமானார்



(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் காலமானார்.

கொரோனா நோயால் பீடிக்கப்பட்டு கந்தளாய் வைத் தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் காலமானதாக திருகோணமலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கொஸ்தா தெரிவித்தார்.

80 வயதான அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றியவர். (நி)

# பாராளுமன்ற செயற்பாடுகள் தடைப்படாது-பீரிஸ்



(கொழும்பு)

கொவிட் -19 வைரஸ் தாக்கத்தினால் பாராளுமன்ற செயற்பாடுகள் ஒருபோதும் தடைப்படாது என ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

கொவிட் தாக்கத்தினால் பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை ஒருபோதும் பிற்போடமுடியாது. பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்து செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துறைமுக நகர சட்டமூலத்தில் மேற்கொள்ள வேண் டிய திருத்தங்களை உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை முழுமையாக செயற்படுத்துவோம்.

இருநாள் விவாதத்தை தொடர்ந்து துறைமுக நகர சட்டமூலம் நாளை வியாழக்கிழமை மாலை பெரும் பான்மையான ஆதரவுடன் நிறை வேற்றப்படும். பொருளாதாரத்தை விரைவாக முன்னேற்ற துறைமுக நகரம் பாரிய பங்களிப்பு வழங்கும் எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் நெருக்கடியான சூழலில் தாதியரின் கவனயீர்ப்பு போராட்டம்

**(மன்னார்)**

**மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமை யாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மன்னார் பொது வைத்திய சாலை வளாகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**



குறிப்பாக தாதிய உத்தியோகத்தர்களுக்கு என அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள விசேட விடுமுறை மன்னார் மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுவது இல்லை எனவும். கர்ப்பிணித் தாதிய உத்தியோகத்தர்களுக்கு ஏனைய மாவட்டங்களில் விடுமுறை வழங்கப்பட்டுள்ள போதிலும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இதுவரை விடுமுறை வழங்கப்படவில்லை எனவும் தொடர்ச்சியாக பணியில் ஈடுபடுத்துவதாகவும் போரட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளும் தாதிய உத்தியோகத்தர்கள் ஒழுங்கான முறையில் கிருமித் தொற்று நீக்கவோ ஓய்வு எடுக்கவோ ஒழுங்கான வசதி ஏற்படுத்தித் தரவில்லை எனவும் அதேநேரம் வேறு மாவட்டங்களுக்கு பணியின் நிமித்தம் செல்லும் அம்புலன்ஸ் சாரதிகளோ மேலதிக கடமை மேற்கொள்ளும் தாதிய உத்தியோகத்தர்களோ தங்குவதற்கு ஒழுங்கான ஓய்வு விடுதியோ அல்லது சாதரண அறையோ ஒழுங்கு செய்து தரப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரச்சினைகள் தொடர்பாக மன்னார் பொது வைத்தியசாலை பணிப்பாளரிடம் பல்வேறு முறை சுட்டிக்காட்டியும் இதுவரை நடவடிக்கை மேற்கொண்டு தரவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாரத்துக்குள் தங்களது பிரச்சினைக்குத் தீர்வு பெற்று தராவிட்டால் இலங்கை முழுவதும் உள்ள தாதியர்களோடு இணைந்து தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக தெரிவித்துள்ளனர். (8-4-285)

## வவுனியா பொலிஸார் தீவிர சோதனை

(நெளுக்குளம்)

வவுனியா நகர்ப்பகுதிக்கு வருகைதந்த மக்கள் அனைவரையும் பொலிஸார் தீவிர சோதனைக்குட்படுத்தினர்.

நேற்றுக் காலை முதல் மேற்கொள்ளப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையின் போது தேசிய அடையாள அட்டைகளை பார்வையிட்டு நேற்றைய தினம் அனுமதிக்கப்பட்ட அடையாள அட்டை இலக்கங்களை உடையவர்கள் மாத்திரமே நகர்ப்பகுதிக்குள் அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதன்போது தொழில்களுக்கு செல்வோர்கள் உரிய ஆவணங்களை காண்பித்தால் மாத்திரமே நகரிற்குள் அனுமதிக்கப்பட்டதோடு அத்தியாவசிய தேவை உடையோரும் அனுமதிக்கப்பட்டனர். இதன்போது நேற்றுக் காலை நகரிற்குள் நுழையும் பிரதான வீதிகள் சனநெரிசலாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-4-250-299)

## ஆண்டாங்குளம் நில அளவை வெற்றிகரமாக தொடங்கியது

(அக்கராயன்)


முல்லைத்தீவு கரைதுறைப்பற்று ஆண்டாங்குளம் கிராமத்தில் நேற்று முன்தினம் நில அளவை இடம்பெற்றுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் உ.றனிஸ்லா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ் மக்களின் பூர்வீக நிலமான ஆண்டாங்குள கிராம மக்களின் குடியிருப்பு நிலங்களை விடுவிக்க கோரி பல காலமாக முயற்சி செய்து வருகிறேன். கரைதுறைப்பற்றின் காணி உத்தியோகத்தர், வனவளத்திணைக்களத்தினர் ஆகியோரை சந்தித்த போது 15 நாட்களுக்கு காணி விடுவித்து தருவதாக கூறியிருந்தார்கள். ஆனால் ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என பிரதேச செயலகத்திற்குச் சென்று கேள்வி எழுப்பிய போது காணி விவகாரம் நில அளவைத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுவரை அவர்களிடம் இருந்து பதில் வரவில்லை என கூறியமைக்கு அமைவாக சிரேஷ்ட நில அளவு உத்தியோகத்தரை சந்தித்து கதைத்திருந்தமைக்கு அமைவாக நேற்று முன்தினம் நில அளவைத் திணைக்களம், வனவளத் திணைக்களம், காணி உத்தியோகத்தர் ஆகியோர் ஆண்டாங்குளத்திற்கு வருகை தந்து நில அளவினை மேற்கொண்டுள்ளனர் எனவும் பிரதேச சபை உறுப்பினர் உ.றனிஸ்லா தெரிவித்தார்.(8-4-350)

## முட்டிக்குள் இருந்து 30 கைக்குண்டுகள் மீட்பு

(நெளுக்குளம்)



வவுனியா பூவரசங்குளம் பகுதியிலுள்ள தோட்டக் காணியில் முட்டி ஒன்றிற்குள் இருந்து கைக்குண்டுகளை பூவரசங்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது.

நேற்று முன்தினம் மாலை குறித்த பகுதியில் உள்ள தனியார் தோட்டக் காணியை அதன் உரிமையாளர் உழவியந்திரம் மூலம் பண்படுத்தியுள்ளார்.

பண்படுத்தப்பட்ட போது குறித்த காணியில் முட்டி ஒன்றினுள் கைக்குண்டுகள் இருப்பதை அவதானித்தார்.

பின்னர் குறித்த விடயம் பூவரசங்குளம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டபின் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் முட்டியினுள் காணப்பட்ட 30 கைக்குண்டுகளை மீட்டுள்ளனர்.

எனினும் மண்ணில் புதையுண்டு வெடிபொருட்கள் இருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசேட அதிரடிப்படையினருக்கும் தகவல் தெரிவித்தனர்.

நீதிமன்றின் அனுமதியுடன் குறித்த பகுதியில் சோதனை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (8-4-299)

## இராணுவத்தின் திடீர் முடக்கத்தால் திணறும் பொதுமக்கள்

(தருமபுரம்)

கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் அல்லது முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கும் செல்வதற்கான அனுமதி நேற்றையதினம் இராணுவத்தினரால் தருமபுரம் நெத்தலியாற்றுப் பகுதியில் மறுக்கப்பட்டுள்ளது.

எந்தவித முன்னறிவித்தலும் இன்றி திடீரென மூடப்பட்டுள்ளதால் பலர் பாதிக்கப்பட்டனர். ஒரு முன்னறிவித்தலுமின்றி இராணுவத்தின் செயலிற்கு அனைத்துத் தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டனர். இது சம்பந்தமாக அன்றாட ஜீவியத்தை மேற்கொண்டு வரும் பலரும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கவலை வெளியிட்டனர். இது தொடர்பாக இராணுவத்தினர் கூறுகையில், புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றுக் காரணமாக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். சிலர் கருத்துத் தெரிவிக்கையில், நேற்றையதினம் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை குழப்பும் ஓர் செயலாக இருக்கலாம் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.(8-4-316)

## வெடி மருந்துடன் இருவர் கைது

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டம் பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வண்ணாங்கேணி பகுதியில் இரண்டு கிலோ கிராம் வெடி மருந்துகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் அதிகாலை குறித்த நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் வெடிபொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதாகிய இருவரும் பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பிலான அடுத்தகட்ட நடவடிக்கைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8-4-100)



மன்னார் தாராபுரம் துருக்கி சிட்டியில் அமைக்கப்பட்டுள்ள ஆண்களுக்கான கொரோனா இடை நிலை சிகிச்சை நிலையத்திற்கு ஒரு தொகை பொருட்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன.

(படம்:- ஜோசேப்நயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

19.05.2021
வைகாசி 05 , புதன்கிழமை
சப்தமி முற்பகல் 8.24 மணிவரை
ஆயில்யம் முற்பகல் 11.37 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை
சந்திராஷ்டமம்: உத்தராடம், திருவோணம்

வளவன்


மேஷம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகள் வழியில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.


மிதுனம்

நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.


கடகம்

குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.


சிம்மம்

நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், குடும்பச் சுமை கூடும் நாள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.


கன்னி

அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் கிடைக்கலாம், சுப விரயங்கள் அதிகரிக்கலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், சஞ்சலங்கள் கூடும்.


துலாம்

அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்கால வெற்றிக்கு திருப்புமுனையான நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


விருச்சிகம்

செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அந்நியர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு,


தனுசு

குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.


மகரம்

சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கும்பம்

சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மீனம்

உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

உயிர் இருக்கும் வரை நம்பிக்கையும் இருக்கும்.



காணாமல் போனவர்களின் உறவினர்களால் வவுனியா பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

(படம்:-சதீஸ்)

# பாலஸ்தீனம் மீதான இன அழிப்பை நிறுத்த வேண்டும்-எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் இரு இராச்சியங்களாக அங்கீகரிக்கப்பட்டு மத்திய கிழக்கில் உருவாகியுள்ள அதிகார போராட்டத்திற்கு தீர்வு காணப்பட வேண்டும்.

அதேபோல் பாலஸ்தீனம் மீதான திட்டமிட்ட இன அழிப்பை மேற்கொள்ளும் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இஸ்ரேல் - பாலஸ்தீன விவகாரம் குறித்து சபையில் கருத்தொன்றை முன்வைத்தார். இதன்போது அவர் கூறுகையில்,

காஸா பகுதியில் இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலின் காரணமாக பாலஸ்தீன பகுதியில் பாரிய அளவிலான இன அழிப்பு இடம்பெற்று வருகின்றது. இது உண்மையில் ஒரு இன அழிப்பாகும்.

இந்த பிரச்சினைக்கு இருக்கும் ஒரே தீர்வு இரு இராச்சிய உருவாக்கமாகும். இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் இரு இராச்சியங்களாக அங்கீகரிக்கப்பட்டு மத்திய கிழக்கில் உருவாகியுள்ள அதிகாரப் போராட்டத்திற்கு தீர்வு காணப்பட வேண்டும்.

அதேபோல் பாதிக்கப்பட்ட பாலஸ்தீன மக்களுக்காக நாம் குரல் கொடுக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி)

# தலைமுறைகள் கடந்தாலும் தமிழர்களால் மறக்க முடியாத நாள்

## இசையமைப்பாளர் இமான் டுவிட்

(சென்னை)

தமிழினப் படுகொலையின் 12 ஆவது ஆண்டு நினைவை குறிக்கும் வகையில், மே-18 தலைமுறைகள் கடந்து தமிழர்கள் மறக்க முடியாத நாளாகும் என பிரபல இந்திய இசையமைப்பாளர் டி.இமான் பதிவிட்டுள்ளார்.



தமிழினப்படுகொலையின் 12 ஆவது ஆண்டு நினைவை நேற்று உலகத் தமிழர்கள் நினைவுகூர்ந்த நிலையில் பிரபல இந்திய இசையமைப்பாளர் டி.இமான் தனது முகநூல் பக்கத்தில் மே- 18 தமிழினப்படுகொலை நாளை நினைவுகூர்ந்துள்ளார்.

தமிழினப் படுகொலை காட்சியை வெளிப்படுத்தும் புகைப்படத்துடன் கூடிய தனது நினைவுப் பகிர்வை டி.இமான் தனது சமூக வலைத்தள பக்கங்களில் பகிர்ந்துள்ளார். (நி)

# இராணுவத்தினர் மட்டுமல்ல பொதுமக்களும் இறந்தார்கள்

## பிரதமருக்கு சுட்டிக்காட்டிய சுமந்திரன்

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தின் போது பொதுமக்களும் இறந்தார்கள் என்பதை மறந்து விடக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, போரில் பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் இறந்ததை நினைவுபடுத்தியிருந்தார்.

இந்த நிலையில், பிரதமரின் உரையை அடுத்து அதற்கு பதில் வழங்கும்படியாக கருத்து வெளியிடும்போதே எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

"பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது உரையின் போது பல்லாயிரக்கணக்கான உயிர்கள் இறந்ததை நினைவுபடுத்தியிருந்தார்.

இதில் பொதுமக்களும் உள்ளடங்குகிறார்கள். பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் அன்றைய நாளில் கொல்லப்பட்டார்கள்.

இராணுவம் மட்டுமன்றி பொதுமக்களும் இறந்தார்கள் என்பதை நான் சபையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்" என தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரிவு

"அரசே! என்னைத் தங்கள் திருக்கண்களால் நன்றாகப் பாருங்கள். நான் இந்தக் கட்டிலைத் தலைக்கு மேல் தாங்கியுள்ளேன்.

ஆகவே அதன் கால்களின் நீளப்படி என் இடுப்பு வரையிலான மேற்பாதி உடம்பு இருட்டாக, நிழலாக உள்ளது.

இடுப்பிலிருந்து பாதம் வரை வெளியே தெரிவதால், கீழ்ப்பாதி உடம்பு வெயிலில் பட்டு பளிச்சென்றுள்ளது.


உங்கள் நிபந்தனைப் படியே பாதி நிழலும், பாதி வெயிலுமாக அரண்மனைக்கு வந்துள்ளேன்.

பரிசாக அறிவித்த நூறு தங்கக் காசுகளை இந்த ஏழைகளுக்கு வழங்க வேண்டுகிறேன்" என்றார் தச்சர்.

அக்பர் புன்சிரிப்புடன் "முடியாது" என்றார்! தச்சர் திடுக்கிட்டார். கட்டிலைக் கீழே வைத்து விட்டு, கைகட்டி நின்றார். அக்பர் ஏன் அப்படிச் சொன்னார் என்பது புரியாமல் குழப்பமடைந்தார்.

அக்பர் தச்சரிடம், "உனக்கு கூடுதலாக ஐம்பது தங்கக்காசு சேர்த்து நூற்று ஐம்பது தங்கக் காசு தருகிறேன்.

ஆனால், உண்மையைச் சொல். உனக்கு யார் இந்த உபாயம் சொல்லிக் கொடுத்தார்? அந்த ஆள் எங்கே இருக்கிறார்? சொல்ல மறுத்தால் பரிசும் கிடையாது. கீழ்ப் படியாமைக்காக சிறைத்தண்டனை கிடைக்கும்" என்றார்.



தச்சர் பயந்துபோய் கைகூப்பி, "மன்னர் பெருமானே! நான் ஒரு முட்டாளுங்க. என்னால் புதிருக்கு விடை கண்டு பிடிச்சிருக்க முடியாதுன்னு தாங்கள் நினைச்சது சரிதாங்க.

கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஒரு புரோகிதர் ஐயா நாங்க தொழிலாளர்கள் இருக்கிற பகுதியில குடிவந்தாரு. அவரோட குச்சு வீட்டுக்கு நான்தான் மரவேலையெல்லாம் செஞ்சு குடுத்தேன்.

அவர்தன்னோட பேரு "பல்பீர்" என்று சொன்னாரு. நான் தான் தண்டோரா செய்தி கேட்டு அவர்கிட்ட சும்மா சொன்னேன். (தொடரும்)

# மகாபாரதம்




### போர் அறிவிப்பு

பின் கண்ணன் தருமரை சந்தித்து நடந்த விடயங்களைக் கூறி யுத்தத்தை தவிர வேறு வழி இல்லை என்றார்.

எல்லாம் விதிப்படி நடக்கும் என்ற தருமர் தனக்கு துணைக்கு வந்த ஏழு அக்ரோணி படைக்கு முறையே துருபதன், திருஷ்டத்துய்மன், விராடன், சிகண்டி, சாத்யகி, சேகிதானன், திருஷ்டகேது ஆகியவரை சேனாதிபதியாக நியமித்தார்.

அத்தனை பேருக்கும் பிரதம தளபதியாக அவர்களில் ஒருவனான திருஷ்டத்துய்மனை நியமித்தார்.

துரியோதனன் சார்பில் பதினொரு அக்ரோணிப் படைக்கு கிருபர், துரோணர், ஜயத்ரதன், சல்லியன், சுதட்சிணன், கிருத வர்மா, அசுவத்தாமா, கர்ணன், பூரிசிரவா, சகுனி, [illegible] லிகன் ஆகியோர் சேனாதிபதிகளாக நியமிக்கப் பட்டனர். பிரதம தளபதியாக பீஷ்மர் நியமிக்கப்பட்டார்.

இரு திறத்துப் படைகளும் அணி வகுத்துக் குருஷேத்திரப் போர்க் களத்தை நோக்கிச் சென்றன. பலராமர் முன்னரே சொன்னபடி குருஷேத்திரப் போர்க்கால அழிவைப் பார்க்க விரும்பாமல் தீர்த்த யாத்திரைக் குப் புறப்பட்டார்.

குருஷேத்திரத்தில் இரு திறத்துப் படைகளும் அணி வகுத்து நின்றன. தனக்குச் சாரதியாக இருக்கும் கண்ணனை நோக்கி அருச்சுனன் "பரந்தாமா! தேரை விரைவாகச் செலுத்து என் எதிரில் போர் செய்வது யார் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

துரியோதனனுக்கு துணையாக வந்திருப் போரைக் காண வேண்டும்" என்றான்.

பார்த்தசாரதியும் தேரினை கௌரவர் படைமுன் செலுத்தினார். அப்போது பீஷ்மரையும், துரோணரையும் துரியோதனனையும் அவன் தம்பியர்களையும், நண்பர்களையும், எண்ணற்ற வீரர்களையும் அருச்சுனன் கண்டான். உள்ளம் கலங்கினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை அண்டிய நாடுகளுக்கு தடுப்பூசிகளை விரைவாக விநியோகிக்க வேண்டும்

## -யுனிசெப் அமைப்பு கோரிக்கை-

**(வோஷிங்டன்)**

**இந்தியாவை அண்டிய இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு விரைவாக கொவிட்-19 தடுப்பூசிகளை விநியோகிக்குமாறு ஐக்கிய நாடுகளின் அவசர சிறுவர் நிதியமான யுனிசெப் அமைப்பு, ஜி-7 நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

யுனிசெப் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹென்ரியெட்டா ஃபோரெ இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

தற்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவலின் இரண்டாவது அலையினால் அந்த நாடு பெரும் நெருக்கடியில் உள்ளது.

அதனை அண்டிய நாடுகளான இலங்கை, நேபாளம் மற்றும் மாலைதீவு போன்ற நாடுகளிலும் குறிப்பிடத்தக்களவு வேகமாக கொவிட் -19 நோய்ப் பரவல் அதிகரித்து வருகிறது.

இந்த நோய்ப் பரவலை கட்டுப்படுத்தாமல்விட்டால் நெருக்கடி நிலைமையும் புதிய வகையான திரிபடைந்த வைரஸ்களும் உருவாகக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

எனவே இந்த மோசமான நிலைமையை தடுப்பதற்கு துரிதமாக கொவிட்-19 தடுப்பூசிகளை விநியோகிக்க வேண்டும்.

இதற்கான நடவடிக்கைகளை ஜி-7 நாடுகள், கொவெக்ஸ் திட்டத்தின் ஊடாக முன்னெடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-8)

# சிறார்களை பாதிக்கும் புதியவகை கொரோனா

## சிங்கப்பூரில் கண்டுபிடிப்பு

(சிங்கப்பூர்)

சிறார்களை கடுமையாக பாதிக்கக்கூடிய புதியவகை கொரோனா வைரஸ் சிங்கப்பூரில் பரவுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அந்த நாட்டின் பாடசாலைகள் அனைத்தும் நாளை முதல் மூடப்படவுள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்தியாவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸை ஒத்த வகையிலான புதிய வகை வைரஸ் தற்போது சிங்கப்பூரின் பல இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பல மாதங்களாக சிங்கப்பூரில் கொவிட் அச்சுறுத்தல் மிகக்குறைந்த மட்டத்தில் நிலவிவந்த போதும் திடீரென அதில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவில் முதலில் அடையாளம் காணப்பட்ட பி.1.617 வகை கொரோனா திரிபு, சிறார்களை கடுமையாகப் பாதிக்கும் என்று சிங்கப்பூரின் ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-3 407 910**

**தொற்று :-164 366 823**

**(நேற்றைய நிலவரம்)**

# 'டவ்தே' சூறாவளியால் இந்தியாவில் 14 பேர் பலி





(டில்லி)

இந்தியாவில் தென்கிழக்கு அரபிக்கடலில் உருவான 'டவ்தே' சூறாவளி காரணமாக மராட்டியம் மற்றும் கர்நாடகத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கேரளா, கர்நாடகத்திலும் பலத்த மழை பெய்துள்ளது.

அதி தீவிர புயல் நேற்று முன்தினம் அதிகாலை மேலும் தீவிரமடைந்தது. சூறாவளி வேகமாக நகரத் தொடங்கியது. இதன் காரணமாக ஒருநாள் முன்னதாகவே நேற்று முன்தினம் இரவு 9 மணி அளவில் குஜராத் மாநிலத்தில் போர்பந்தர்-மாகுவா இடையே கரையை நெருங்கியது. முன்னதாக மும்பை கடல் பகுதியில் 145 கி.மீ. தொலைவில் சூறாவளி நகர்ந்து சென்றது.

மும்பையில் நேற்று முன்தினம் 120 கி.மீ. வேகம் வரை சூறை காற்று வீசியது. இடைவிடாத மழையும் கொட்டி தீர்த்தது. இதன் காரணமாக நாட்டின் நிதி தலைநகர் மும்பை நிலை குலைந்து போனது.

குஜராத் மாநிலத்தில் கரையை கடக்கும்போது, மணிக்கு 155 முதல் 165 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என கணிக்கப்பட்டு இருந்தது. சூறை காற்று சுழன்று அடித்ததால் குஜராத்தை 'டவ்தே' சூறாவளி குதறிப்போட்டது.

அங்கு கடலோர மாவட்டங்களில் சூறாவளி காற்று, பேய் மழை காரணமாக பல இடங்கள் சின்னாபின்னமாகியுள்ளது. ஏராளமான மின்கம்பங்களும் மரங்களும் சாய்ந்துள்ளன.

இதற்கிடையே 'டவ்தே' சூறாவளி காரணமாக கர்நாடகத்தில் 121 கிராமங்கள் பெரும் பாதிப்பை சந்தித்தன. அந்த மாநிலத்தில் கடந்த 2 நாட்களில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். (நி-8)

# பிரபல எழுத்தாளர் காலமானார்

(சென்னை)

பிரபல எழுத்தாளர் கி.ரா என அழைக்கப்படும் கி.ராஜநாராயணன், (வயது-99) மூப்பால் புதுச்சேரியில் காலமானார்.

இவர் சிறுகதை,நாவல், குறுநாவல், கிராமிய கதைகள் என இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் இயங்கியவர்.

சாகித்ய அகாடமி விருது, இலக்கிய சிந்தனை விருது, தமிழக அரசின் விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியச் சாதனை விருது (5) உள்ளிட்ட தமிழின் முக்கிய இலக்கிய விருதுகள் பெற்றுள்ளார். (நி-8)

# எட்டு கோடி தடுப்பூசிகளை உலக நாடுகளுக்கு அனுப்ப உள்ளோம்

## ஜோ பிடனின் அதிரடி தகவல்


(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் 200 நாடுகளுக்கும் மேல் பரவியுள்ளது. கொரோனா வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இதற்கிடையே, அமெரிக்காவில் முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் மாஸ்க் அணிய தேவையில்லை என அந்நாட்டு நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் அறிவித்தது.

சி.டி.சியின் இந்தப் பரிந்துரையை அரசும் செயற்படுத்தி உள்ளது. அதன்படி ஜனாதிபதி ஜோ பிடன் மற்றும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் ஆகியோர் அண்மையில் மாஸ்க் இல்லாமலேயே செய்தியாளர்களைச் சந்தித்தனர். இதனால் அமெரிக்காவில் விரைவில் இயல்பு நிலை திரும்ப உள்ளதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், பல்வேறு நாடுகளின் கோரிக்கைகளை ஏற்று அடுத்த 6 வாரங்களில் உலக நாடுகளுக்கு 8 கோடி



தடுப்பூசிகளை வழங்க உள்ளோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (நி-8)

# ரொக்கெட் தாக்குதலில் இஸ்ரேலுக்கு பாதிப்பில்லை

(ஜெருசலேம்)

லெபனாலிருந்து வடக்கு இஸ்ரேல் நோக்கி ஆறு ரொக்கெட்டுகள் நேற்று முன்தினம் வீசப்பட்டதாகவும் எனினும் அவை வெற்றியளிக்கவில்லை என்றும் இஸ்ரேலிய பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

லெபனானில் உள்ள சிறிய பாலஸ்தீனிய பிரிவுகள் கடந்த காலங்களில் இஸ்ரேல் மீது அவ்வப்போது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்புக்கள் கட்டுக்கடங்காமல் செல்லக்கூடும்
# நாடளாவிய ரீதியில் முடக்கல் அவசியம்
## மருத்துவ வல்லுநர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**கொவிட்டைக் கட்டுப்படுத்த நாடளாவிய ரீதியில் முடக்கலை நடைமுறைப்படுத்து மாறு கடிதம் மூலம் ஜனாதிபதியிடம் இலங்கையின் மருத்துவ வல்லுநர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இலங்கைத்தீவு முழுவதும் மக்கள் நடமாட்டத்தை உடனடியாகக் கட்டுப்படுத்துவதன் மூலம் பின்னர் ஊரடங்கு உத்தரவுகளைத் தவிர்க்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொவிட் இறப்புகள் கட்டுக்கடங்காமல் செல்லக்கூடும் என்றும் ஒரு கடுமையான தேசிய பேரழிவு என்பது எதிர்காலத்தில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்றும் மருத்துவக் குழுக்கள் எச்சரித்துள்ளன.

மேலும் இந்நெருக்கடியைச் சமாளிப்பது குறித்து இந்தக் கடிதத்தில் ஜனாதிபதிக்கு மருத்துவ சங்கங்கள் பரிந்துரைகளையும் செய்துள்ளன.

அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட முடக்கல்கள் அறிவியல் ஆதாரங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதும் இதில் ஒரு பரிந்துரையாகும்.

இந்த மோசமான வைரஸைக் கட்டுப்படுத்துவதில் தமது ஒருங்கிணைந்த முயற்சிகள் எப்போதும் அர்ப்பணிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துள்ள மருத்துவ வல்லுநர்கள், அழிவுகளைத் தடுக்க ஊரடங்கு உட்பட்ட கடுமையான சட்டங்களை அமுல் செய்ய அவசியம் ஏற்படும் என்றும் குறிப்பிட்டுள்ளன.

அரசாங்கம் இப்போது செயற்படவில்லை என்றால், அது எதிர்காலத்தில் பொது மக்களுக்கு பாரிய கஷ்டங்களை ஏற்படுத்தும்.

கொவிட் நோயாளிகளின் அனைத்து சுகாதாரத்துறை படுக்கைகள் மற்றும் சுகாதார வசதிகளின் பயன்பாடு விரைவாக அதிகரித்துள்ளன.

அதேநேரத்தில் ஒட்சிசன் தேவைப்படுபவர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருவதாகவும் மருத்துவ வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

கொவிட்டை விரைவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாவிட்டால் மேலும் அதிக விலை கொடுக்க வேண்டும் என்றும் மருத்துவ வல்லுநர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

# சமூகத் தொற்றாக மாறினால்
## கட்டுப்படுத்தும் முறைமையில் மாற்றம் தேவை
### சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்




(கொழும்பு)

நாட்டில் கொரோனா இன்னும் சமூகத் தொற்றாக உருவெடுக்கவில்லை. நிலைமை கட்டுப்பாட்டில் தான் உள்ளது என சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொரோனா சமூகத் தொற்றாக உருவெடுத்தால் நாட்டின் கொவிட் நிலைமையைக் கையாள்வதில் தற்போதுள்ள மூலோபாயம் மாற வேண்டும்.

எனினும் இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். அதேநேரத்தில் அவர்களின் நெருங்கிய தொடர்புகளின் தொடர்பு தடமறிதல் நடந்து வருகிறது எனவும் டாக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நாட்டில் தொற்று நோய் நிலைமை தற்போது கட்டுப்பாட்டில் உள்ளது என்பதில் நாங்கள் மிகவும் உறுதியாக இருக்கிறோம்.

இலங்கையில் மூன்றாவது அலையைத் தொடர்ந்து கொரோனாத் தொற்று சமூகப் பரவலாக மாறியுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தினர் கூறுகின்றனர்.

இந் நிலையில் தொற்று நோயைக் கையாள்வதில் தற்போதுள்ள மூலோபாயத்தை மாற்று மாறு பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஆனால் இது சமூகத் தொற்றில்லை என சுகாதார அதிகாரிகள் தொடர்ந்து கருத்து வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இன்று ஒரு தகவல்
### தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வாதத்துக்கு மருந்து

ஒரு ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அவர் பார்வை இல்லாதவர், வாதாடுவதில் மிகவும் கெட்டிக்காரர். தர்க்கத்தில் மேதை. அவரிடம் சில பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருத்தர் சொன்னார்...

சூரியன் வெளிச்சத்தைக் கொடுகின்றது. சந்திரன் வெளிச்சத்தைக் கொடுக்கின்றது. விண்மீன் வெளிச்சத்தைக் கொடுக்கின்றது. வெளிச்சம் என்று ஒன்று இருப்பதனால் நமக்கு எவ்வளவோ உபயோகம் இருக்கு என்றார்.

உடனே பார்வை இல்லாத அந்தப் பெரியவர். வெளிச்சம் என்று ஒன்று உண்மையிலேயே இருக்கின்றதா? என்றார். உண்மையிலேயே ஒளி இருக்கு என்றார்கள். நான் அதை நம்பமாட்டேன் என்றார். சூரியன் இருக்கு, சந்திரன் இருக்கு, நட்சத்திரம் இருக்கு என்று சொன்னார்கள்.

அதையெல்லாம் ஒப்புக் கொள்கின்றேன். ஆனால் அதையெல்லாம் என்னை கொஞ்சம் தொட்டுப் பார்க்க விடுங்களேன் என்றார். அதையெல்லாம் தொட்டு அறிய முடியாது என்றார்கள். அப்படி என்றால் முகர்ந்து பார்க்க விடுங்கள்... ஏதாவது வாசனை வருகின்றதா? என்று பார்க்கின்றேன் என்றார். அதுவும் முடியாதே என்றார்கள். பெரியவர் யோசனை செய்தார். சரி பரவாயில்லை முரசு அடிக்கிறது மாதிரி அடித்துப் பார்க்கவாவது ஏற்பாடு செய்து கொடுங்களேன்... அதை அடித்துப் பார்த்து அதன் சத்தத்தை உணர்ந்து கொள்கின்றேன் என்றார்.

அதாவது ஒளியின் ஒலியை வெளிச்சத்தின் சத்தத்தைப் புரிந்து கொள்கின்றேன் என்றார். அதற்கும் சாத்தியமில்லை என்றார்கள்.

சரி...அதுவும் முடியவில்லை என்றால் அந்த வெளிச்சத்தில் கொஞ்சம் எடுத்து என் கையில் கொடுங்கள்... வாயில் போட்டு விழுங்கி ருசி பார்க்கின்றேன் என்றார். எந்த வகையிலேயும் அவரை ஒப்புக்கொள்ள வைக்க முடியவில்லை.

சுற்றியிருந்தவர்கள் எல்லாம் குழம்பிப் போய்விட்டார்கள். என்னங்க நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பலையா? என்றார்கள். என்னுடைய நான்கு புலன்களுக்கும் புலப்படாத ஒன்றை நான் மாயை என்கின்றேன். நீங்கள் என்னை அவமானப்படுத்துவதற்காக இப்படிச் சொல்கின்றீர்கள் என்று நினைக்கின்றேன்.

ஏதோ உங்களுக்கெல்லாம் பார்வை என்று ஒன்று இருக்கிறதாகவும் அது எனக்கு இல்லை என்கிறதாகவும் சொல்லி என்னை நீங்கள் அவமதிக்கிறீர்கள் என்றார் தர்க்க சாஸ்திரத்தில் மேதையான அந்தப் பெரியவர். சுற்றியிருந்தவர்கள் பார்த்தார்கள்...

வெளிச்சம் இருக்கு என்பதை இவர் நம்ப வேண்டும். இவரை நம்ப வைக்க வேண்டும் என்றால் அது புத்தராலே தான் முடியும் என்றார் ஒருத்தர். சரி அவர் அருகிலே போவோம் என்று சொல்லி எல்லோரும் அவரிடம் போய்ச் சேர்ந்தார்கள். விபரத்தைச் சொன்னார்கள்.

புத்தர் சிரித்தார். உண்மை எப்படிப்பட்டது என்று நான் நினைக்கின்றேனோ அப்படித்தான் அவரும் நினைக்கின்றார். எதையும் அனுபவபூர்வமாக உணர்ந்தால் தான் நம்ப முடியும்.

ஒளியை அனுபவித்து அறியாதவரையில் அது இருக்கிறதா? இல்லையா? என்கின்ற கேள்விக்கே இடமில்லை. அதனாலே இவர் அதை நம்பாததும் சரி தான் என்றார். அதற்குப் பின்பு சொன்னார்...

உங்களை குணப்படுத்தி விடலாம். உங்களுக்குத் தேவை ஞானி அல்ல... உங்களுக்குத் தேவை மருத்துவர் என்றார்.

ஒரு டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போனார்கள். பார்வை கிடைத்துவிட்டது. வெளிச்சத்தைக் கண்டதும் அவர் மகிழ்ச்சியடைந்தார். புத்தரை வணங்கினார்.

நான் வாதம் செய்தேன். நீங்கள் எதிர்வாதம் செய்யவில்லை. என்னுடைய பிரச்சினை மருத்துவரால் தான் தீரும் என்று சொல்லி எனக்குப் பார்வை கிடைக்கச் செய்தீர்கள் என்றார்.

மனித குலத்தில் மிகப் பெரும்பாலானவர்களின் நிலைமை இது தான் என்கின்றார் ஓஷோ. கண்ணை மூடிக் கொண்டு அதை சரி என்று ஒருத்தர் வலியுறுத்திக் கொண்டிருந்தால் அவருக்கு உதவுவது என்பது முடியாத காரியம்.

இந்தக் காலத்தில் சில பேர் கண்களைத் திறந்து கொண்டே சில காரியங்கள் செய்வார்கள். அது தவறு என்று அவர்களுக்குப் பின்னால் தான் புரியும்.

ஒருத்தர் தன்னுடைய வலது காலில் கட்டுப்போட்டுக் கொண்டு நொண்டியடித்துக் கொண்டு வந்தார். என்ன ஆகிவிட்டது? என்று விசாரித்தார்கள். எங்கள் வீட்டுக் கண்ணாடி ஜன்னல்களை வெளிப் பக்கம் இருந்து சுத்தப்படுத்தினேன். சரியாக துடைச்சிருக்கின்றோமா என்று கொஞ்சம் பின்னால் தள்ளி நின்று பார்த்தேன் என்றார். [illegible] உங்கள் கால் உடைந்ததுக்கும் என்ன சம்பந்தம்? என்றார்கள். நான் குடியிருந்தது நாலாவது மாடி ஆகிவிட்டதே என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**90** விகிதமான ஏவுகணைகளை இஸ்ரேலிய எல்லைப் பாதுகாப்பு படையினரால் வானிலேயே தகர்க்கப்பட்டது. ஆனால், சில ஏவுகணை கள் இஸ்ரேலிய தலைநகர் டெல் அவிவ் மற்றும் பிற நகரங்களில் விழுந்தன.





இஸ்ரேல் - பாலஸ்தீன தரப்பினருக்கான மோதலானது கடந்த சில தினங்களாகவே ருத்ர தாண்டவம் ஆடி வருகிறது. முற்றுப்புள்ளிகள் ஏதுமின்றி இரு தரப்புக்குமான தாக்குதலானது பதிலுக்கு பதில் என்று நீண்டு கொண்டுள்ளது.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இதில் மரணமடைந்தவர்கள், காயப்பட்டவர்களின் நிஜ எண்ணிக்கையானது இன்னும் சரிவர தெரியவில்லை.

# பற்றி எரியும் பாலஸ்தீனம்

### பதிலுக்கு பதில் தாக்குதல் நடத்தும் இஸ்ரேல் – பாலஸ்தீனம்

இஸ்ரேலின் ஜெருஸலேமில் உள்ள அல்-அக்ஷா மசூதியில் பாலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலிய பாதுகாப்பு படையினருக்குமிடையே



**இஸ்ரேல் - பாலஸ்தீனம் பிரச்சினையானது முதலாம் உலகப் போரின் முடிவில் இருந்தே தொடங்கிவிட்டது. இரு தரப்பினரும் ஜெருசலேத்தின் நிலப்பரப்பை தங்களுக்கு உரிமை கோரி போராடி வருகின்றனர்.**

கடந்த திங்கட்கிழமை அன்று மோதல் நடந்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது.

பதிலுக்கு. பதில் கொடுப்போம் என்று மீண்டும் இஸ்ரேல் இராணுவத்தினர் ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைமைக் கட்டடமான காசா முனை பகுதியில் இருந்த 13 மாடி கட்டடம் இஸ்ரேலிய படையினரால் தரைமட்டமாக்கப் பட்டது. இதற்கு ஹமாஸ் அமைப்பினர் வான்வெளி தாக்குதலாக 130 சிறிய ரக ஏவுகணைகளை இஸ்ரேல் மீது தொடுத்துள்ளனர்.

அதில் 90வீதம் ஏவுகணைகளை இஸ்ரேலிய எல்லைப் பாதுகாப்பு படையினரால் வானிலேயே தகர்க்கப்பட்டது.

ஆனால், சில ஏவுகணைகள் இஸ்ரேலிய தலைநகர் டெல் அவிவ் மற்றும் பிற நகரங்களில் விழுந்தன. இத்தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட இதுவரை 30க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

### கேரளாவைச் சேர்ந்த செவிலியர் பலி

இதில் குறிப்பாக, இந்தியாவின் கேரளா மாநிலம் இடுக்கியின் கஞ்ச்குஷி பஞ்சாயத்தை சேர்ந்த சேர்ந்த செவிலியரான சௌமியா (வயது 31) ஏவுகணையிலிருந்து வெடித்த சில பாகங்கள் கட்டடத்தின் மீது விழுந்ததில் கட்டடம் இடிந்து அதில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

அங்கு அஷ்கிலான் நகரில் வசித்து வந்த அவர், கடந்த 7 ஆண்டுகளுக்கும் மேலாக மூதாட்டி ஒரு வருக்கு பராமரிப்பு பணிகளை செய்து வந்துள்ளார்.

சம்பவம் நடந்த நாளன்று சௌமியா தனது கணவர் சந்தோஷுடன் வீடியோ கோலில் பேசி வந்துள்ளார். அப்போது, திடீரென கட்டடம் இடிந்து விழுந்ததில் அழைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் பதற்றமடைந்த சந்தோஷ் அங்கு அருகிலுள்ளவர்களை அழைத்து விசாரித்ததில் இதுபோன்ற சம்பவம் அரங்கேறியது தெரிய வந்திருக்கிறது. தொடர்ந்து மீளா துயரத்தைத் தாண்டிய அதிர்ச்சியில் உறைந்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தான் இந்தியாவுக்கு வந்தவர் தனது குடும்பத்தினரை சந்தித்து விட்டு இஸ்ரேல் திரும்பியுள்ளார்.

மீண்டும் இந்தாண்டு ஜூலை மாதம் இந்தியாவுக்கு வர திட்டமிட்டிருந்தார். சௌமியாவிற்கு 10 வயதில் ஒரு மகன் உள்ளார். இந்தியாவைச் சேர்ந்த சௌமியாவின் மரணத்திற்கு இஸ்ரேல் அரசாங்கம் வருத்தம் தெரிவித்துள்ளது.

அவரது குடும்பத்தினரிடம் அலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்த இந்திய வெளியுறவுத் துறை, இத்தாக்குதல் சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுவரையிலும் இல்லாத வகையில் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய ஏவுகணை தாக்குதல் மூலம் வரம்பு மீறி செயற்பட்டுவிட்டதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடுமையாக சாடியுள்ளார்.

### தாக்குதலின் பின்னணி என்ன?!

இஸ்ரேல் - பாலஸ்தீனம் பிரச்சினையானது முதலாம் உலகப் போரின் முடிவில் இருந்தே தொடங்கிவிட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே இஸ்லாமியர்களுக்கும், யூதர்களுக்கும் இடையிலான மோதல் ஆரம்பமாகிவிட்டது.

இரு தரப்பினரும் ஜெருசலேத்தின் நிலப்பரப்பை தங்களுக்கு உரிமை கோரி போராடி வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் பாலஸ்தீனத்தின் ஒவ்வொரு பகுதியாக ஆக்கிரமித்து வரும் இஸ்ரேல் அங்குள்ள இஸ்லாமியர்களை விரட்டியடித்து வருகின்றனர். இதனால் பாலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகள் அமைப்பை தீவிரவாத அமைப்பாகவே முத்திரை குத்தி வைத்துள்ளது இஸ்ரேல் அரசாங்கம். இதுவே பதிலுக்கு பதில் போராக இன்றும் இடைவிடாது வெடித்துக் கொண்டிருக்கிறது.

கடந்த 1967 ஆம் ஆண்டு ஜெருசலேமின் ஓல்ட் சிட்டியை (Old City) இஸ்ரேல் கைப்பற்றியதன் நினைவாக அங்கே பெரிய அளவிலான பேரணியாய் நடத்த திட்டமிட்டிருந்தது. ரமழான் காரணமாக இஸ்லாமியர்கள் அங்கேயுள்ள அல்-அக்ஷா மசூதியில் வழிபாடு நடத்தினர்.

இந்நிலையில், மசூதியினுள் இஸ்லாமியர்கள் கற்களை குவித்து வைத்திருந்தனர். இதனால் பேரணியில் கலவரத்தை ஏற்படுத்த திட்டமிட்டிருப்பதாகக் கூறி அங்கு இஸ்ரேல் இராணுவத்தினரும், பொலிஸாரும் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதன் நீட்சியாகவே தற்போது என்றும் இல்லாத அளவிற்கு தாக்குதல் தொடர்ந்து வருகிறது.

இதுவரை பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த 50 மேற்பட்டவர்கள் உயிரிழந்திருப்பதாகத் தெரிகிறது. 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஒருபுறம் உலகமெங்கும் கொரோனா தனது கோரத் தாண்டவத்தை ஆடி வரும் நிலையில், இது போன்ற மனிதநேயமற்ற தாக்குதல்களால் கொத்துக்கொத்தாக உயிர்கள் பறிபோவது நெஞ்சங்களை உருக்குலைய வைக்கிறது.

ஜுனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 41 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**தீ தின்ற தமிழர் தேட்டம்: நூல் அறிமுகக் குறிப்பு**

இந் நூலின் தொகுப்பாசிரியர் என்.செல்வராஜா இதனை 2013 இல் வெளியிட்டிருந்தார். செல்வராஜாவினால் இந் நூலுக்கு எழுதப்பட்ட அறிமுகக் குறிப்பு 26 ஜூலை 2014 இல் "பதிவுகள்" இணையத்தில் வெளிவந்திருந்தது. அதில் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது.

ஆளும் வர்க்கத்தினால் தீக்கிரையாக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகம் பற்றிய துயர்மிகுந்த வலிகளை இன்றைய மீள்கட்டமைப்பினால் "சரிக்கட்டி" விடலாம் என்ற உணர்வு ஆளும் வர்க்கத்தினரை "புத்தகமும் செங்கல்லும்", "வெண்தாமரை இயக்கம்" போன்ற திட்டங்களை அமுலாக்கத் தூண்டியிருக்கலாம். அதன் வெளிப்பாடாகவே இன்று யாழ்ப்பாண நூலகம் தென்னிலங்கை மக்களுக்கு நல்லதொரு காட்சிப்பொருளாக கைமாறியுள்ளது. முன்னர் போரின் சாட்சியமாக நின்ற அதே நூலகம் கால மாற்றத்தால் நல்லிணக்கத்தின் தூதுவனாகக் காட்சியளிக்கிறது.

காலக்கிரமத்தில் புதிய சந்ததிகள் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் புது வளர்ச்சியின் வேகத்தில், அதன் கம்பீரமான தோற்றத்தில் தமது முன்னோரின் வேதனைகளைக்கண்டு கொள்ளாத நிலை எழக்கூடும். போர்க்கால யாழ்ப்பாணத்தில் துப்பாக்கிச் சன்னங்களினால் துளையிடப்பட்ட யாழ்ப்பாண நூலகக் கட்டடத்தின் துவாரங்கள் பூசிமெழுகிப் புதுமெரு கூட்டப்பட்டு அவற்றின்பழைய சுவடே தெரியாது மறைக்கப்படலாம். அன்று நூலகத்தைக் கட்டியெழுப்ப களியாட்டவிழாக்கள் கொடித் தினங்களின் மூலம் ஊரெங்கும் திரிந்து ஊணுறக்கமின்றி நிதிதிரட்டிய எம்மவர்களின் உண்டியல்களின் சில்லறைக் குலுக்கல் ஒலி, இன்று பன்னாட்டு நிறுவனங்கள் யாழ்ப்பாண நூலகத்துக்கு அள்ளிக்கொடுக்கும் பெருநிதியின் கனதியில் ஒருவேளை அடிபட்டுப் போய்விடலாம். ஆனால் இந்த நூலகத்தை உயிரினும் மேலாக நேசித்த எம்மக்களின் அக உணர்வுகள் என்றுமே மழுங்கடிக்கப்பட்டு விடக்கூடாது.

அந்த வகையில் இந்தக் கவிதைத் தொகுப்பு தமது மனதுக்கு நெருக்கமானதொரு அறிவாலயத்தை அநியாயமாகப் பறிகொடுத்த ஒரு இனத்தின் வலிமிகுந்த வரிகளைக் கொண்டுள்ளது. பல் துறை சார்ந்தவர்களாலும்,பல்வேறு இலக்கியத்தரம் கொண்டவர்களாலும் அவ்வப்போது எழுதப்பட்டவை.

இத்தொகுப்பில் ஈழத்தின் முதுபெரும் கவிஞர்களான முருகையன், எம்.ஏ.நுஹ்மான்,சோ.பத்மநாதன், பண்டிதர் விரகத்தி, சு.வில்வரத்தினம் போன்றோரின் கவிதைகளும் உள்ளன. சாம்பல் குவியலின் நடுவே நின்று தீ தின்ற நூல்களின் பக்கங்களின் கருகிய நெடியைச் சுவாசித்தபடி எழுதப்பட்ட ஒரு அமெரிக்கப் பயணியின் கவிதையும் இதில் அடங்கியுள்ளது. தாயக மண்ணில் வாழ்ந்துவரும் மாணவச் சமூகத்தை நோக்கி யாழ்ப்பாண நூலகம் பற்றிய கவிதை எழுதுங்கள் என்றதும் தாம் நேரில் காணாத போதிலும் கேள்வி ஞானத்தில் அதனைக் கவிதையாக எழுதிய சாதாரண பள்ளி மாணவரின் கவிதைகளும் உண்டு. புலம்பெயர்ந்து வாழ்ந்தபோதும் மனதில் மாறாத வலிகளைச்சுமந்து நிற்கும் புகலிடக் கவிஞர்கள் யுகசாரதி- கருணானந்தராஜா, இளைய அப்துல்லாஹ், வேதா இலங்காதிலகம்,நகுலா சிவநாதன்போன்றோரின் கவிதைகளும் இதில் அடங்கு கின்றன.

மொத்தத்தில் பல்வேறு கால கட்டங்களிலும் பல்வேறு ஊடகங்களிலும் வெளியாகிய கவிதைகளை தரம்பிரித்துத் தேர்வுசெய்யாமல்,அவரவரின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து முடிந்தவரை நிறைவை நோக்கிய ஒரு தொகுப்பாகத் தேடித் தொகுத்து ஒரே நூலில் பதிவுசெய்து வழங்கியிருக்கிறேன். வழமை போலவே இதனையும் ஒரு முழுமையான தொகுப்பாக என்னால் கூறமுடியாது. முழுமையை நாடியதொரு பணியே இது. இத்தொகுப்பில் இடம்பெறத்தவறிய கவிதைகளைக் கண்டறியும் எவரும் அதனை எனக்கு அனுப்பிவைத்தால் பின்னைய பதிப்புகளில் அவற்றையும் இடம் பெறச்செய்து இத்தொகுப்பினை முழுமையானதாக்க முயற்சிக்கலாம்.

இக்கவிதைகளில் நாம் தேடப்போவது சந்தம்மிகு கவிதைவரிகள் அல்ல. மரபுக்கவிதையின் இலக்கணங்களல்ல. நசுக்கப்பட்ட ஒரு இனத்தின் உணர்வுக் குவியல் மட்டுமே. ஈழத்தமிழரின் பண்பாட்டுக் கருவூலமாக,அவர்களது கல்வியின் குறியீடாகத் திகழ்ந்து இனவாதத் தீயினால் பொசுக்கப்பட்ட அந்த அறிவாலயத்தை இழந்த வலியின் பதிவுகளாக இவை பத்திரப்படுத்தப்படுகின்றன.காலத்தால் அழியாத அவர்களது உணர்வுகளை இக்கவிதைகள் வரிகள் தோறும் தேக்கிவைத்திருக்கின்றன. இவையே யாழ்ப்பாண நூலகம் பற்றிய அந்த மண்ணின் மக்களின் இதயபூர்வமான மனப்பதிவு. எதிர்காலத்தில் யாழ்ப்பாணப் பொது நூலக வரலாற்றைப் படிக்கப்போகும் புதிய சந்ததியினருக்கு இப்பதிவை சமர்ப்பிக்கின்றேன். இவ்வாறு அவர் எழுதியுள்ளார்.

**என்.செல்வராஜா பற்றி சில வரிகள்........**

நடராஜா செல்வராஜா ஈழத்து நூலகவியலாளர், ஆய்வாளர், பதிப்பாளர். இலங்கை யாழ்ப்பாண மாவட்டம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.இலங்கையிலும் பிற நாடுகளிலும்வெளிவந்த ஈழத்து நூல்கள், ஈழம் தொடர்பான நூல்களின் விபரங்களைத் திரட்டி நூல்தேட்டம் எனும்பெயரில் தொகுத்து வருகிறார்.

இதுவரை ஒவ்வொன்றும்ஆயிரம் நூல்கள் பற்றிய தகவல்களுடன் 14 நூல் தேட்டத்தொகுதிகள் வெளிவந்துள்ளன. மேலும் சிங்கப்பூர், மலேசிய நூல்களுக்கான நூல் தேட்டத் தொகுதியொன்றும் வெளி வந்துள்ளது. யாழ்ப்பாணப்பொது நூலகம்: ஒருவரலாற்றுத் தொகுப்பு மற்றும் தீ தின்ற தமிழர் தேட்டம் என்பன செல்வராஜா எழுதியநூல்களாகும். அயோத்தி நூலக சேவைகள் என்னும்பதிப்புமுயற்சியினூடாகப் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். அயோத்தி நூலக சேவைகள் 1985 முதல் 1991 வரை வெளியிட்ட நூலகவியல் காலாண்டிதழின் பிரதம ஆசிரியராகவிருந்த செல்வராஜா இப்பொழுது இங்கிலாந்தில் வசிக்கிறார்.

**வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்தின் ஊடக சந்திப்பு**

வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டு 39 ஆவது நினைவு தினத்தன்று நடத்திய ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போது பின்வருமாறு கூறினார்.

நான் இன்று ஊடகவியலாளர்களைச் சந்திப்பதற்கான முக்கியமான காரணம் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டு 39 ஆவது நினைவு தினம் இன்றாகும். இந்த நூலகத்தைப் பொறுத்தவரை அது தமிழ்த் தேசியத்தின் பொக்கிஷம், சொத்து என்பது எல்லோரும் அறிந்த விடயம். ஆகவே, எல்லோரும் சில கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால் அண்மைக் காலமாக இந்த நூலகம் எரிக்கப்பட்ட திகதி தவறாக ஊடகங்களிலும் நூல்களிலும் எழுதப்பட்டு வருகின்றது. ஒரு முக்கியமான வரலாற்று நிகழ்வின் திகதி தவறாக முன்வைக்கப்படுவதை அந்த நிகழ்வோடு நேரடியாக சம்பந்தப்பட்டவன் என்ற வகையிலே அதை தெளிவுபடுத்த வேண்டிய தேவை எனக்கு இருக்கின்றது.

இந்நூலகத்தை எடுத்துக் கொண்டால், எங்களுடைய நூலக ஆலோசனைக் குழுவிலே பேராசிரியர் நேசையா ஒரு உறுப்பினராக இருந்தவர். அவர் காலம் சென்று விட்டார். யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத்தொகுப்பு என்ற என்.செல்வராஜா வெளியிட்ட நூலில் பேராசிரியர் நேசையா எழுதிய கட்டுரையிலே பந்தி இரண்டிலே இவ்வாறு கூறுகின் றார். **"It was then nearly 800 years after that, on the inglorious first of June 1981, the Priceless collection of nearly 100,000 books in the Jaffna public Library was consigned to the flames and a building which was the architectural pride of the North severely damaged."** இதே வார்த்தைகள் முன்னுக்கும் வந்திருக்கின்றது. இதிலேயும் பேராசிரியர் நேசையா ஜூன் மாதம் முதலாம் திகதி என்று தான் ஆவணப்படுத்தி தந்திருக்கின் றார். அதை விட நாங்கள் 1984 ஆம் ஆண்டு மாநகர சபை கலைக்கப்பட்ட பின் ஜூன் மாதம் 4 ஆம் திகதி அமரர் அமிர்தலிங்கத்தின் மூலமாக இந்த நூலகம் திறந்து வைக்கப்பட்டது. அதிலே இப்போதும் கூட சில குற்றச்சாட்டு. நேற்றும் பார்த்தேன். நாங்கள் அந்தக் காலத்திலே முழுமையாக அரசியலில் இல்லை. நாங்கள் திட்டமிடுகின்ற பொழுது இந்த எரிந்த நூலகத்தினுடைய தென் கிழக்கு கீழ்த்தளம் நினைவிடமாகத் திருத்தப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையிலே தான் எங்களுடைய செயற்பாடு தொடர்ந்து இருந்தது.

அதற்கும் மேலாக நூல கத்தினுடைய ஆரம்ப மூல வரை படத்தில் மேற்குப்புற கட்டடம் அமைக்கப்படாமல் இருந்தது. அதை நாங்கள் புதிதாக அமைக்க வேண்டும் என்று தீர்மானித்து அந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு 04.06.1984 இல் அமிர்தலிங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

அந்த திறப்பு விழாவிலே இதற்கான ஒரு திறப்பு விழா மலர் ஒன்று வெளியிடப்பட்டது. அந்த மலரிலே முன்னுரையிலே ஆங்கிலத்திலே **"It was the first of June 1981 and the still hours of the night"** என்று அதில் சொல்லப்படுகின்றது. அதற்குப் பிறகு அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தினுடைய வாழ்த்துச் செய்தி இருக்கின்றது.

அவரும் அதிலே 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி ஆளுவோரின் காவற்துறையினர் 97 ஆயிரம் நூல்களைக் கொண்டிருந்த இந்த நூல் நிலையத்தை ஓர் ஏடுதானும் எரிவிலிருந்து தப்ப முடியாத விதமாக எரித்து சாம்பராக்கி உலக வரலாற்றில் தமக்கென்று ஒரு தனி இட த்தை தேடிக் கொண்டனர் என்று கூறியுள்ளார்.

எரிந்து கிடந்த சாம்பல் மேட்டை கூட்டியள்ளி அதிலிருந்து புதிதாக மீள முளைக்க திடம் கொண்டது யாழ் நூலகம். மறுபடி எல்லாமே முதலிலிருந்து தொடங்கவேண்டும் என்ற நிலை. தொடங்கினார்கள். எரிக்கப்பட்ட பழம்பெரும் நூல்கள் திரும்ப பெற முடியாதவை தான். ஆனால் மனதின் நம்பிக்கை மீளவும் துளிர்விட்டது. அறிஞர் பெருமக்கள், உதவும் நல்லுள்ளங்கள், பொதுமக்கள் உதவியோடு மீளவும்எழுந்தது அது. மறுபுறம், இலங்கையில் நடக்கும் காட்டுமிராண்டித்தனமான அரச நிர்வாகத்தின் முகம் வெளியுலகில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

அதன் தாக்கமாக 'புத்தகமும் செங்கல்லும்', 'வெண் தாமரை' இயக்கங்கள் மூலம்பழைய வடுவை மறைத்து புதிய உருவைக் கொடுக்க ஆளும் தரப்பு முயற்சித்தது. புதிய கட்டடம், புதிய திட்டங்கள், புதிய நூல்கள் எல்லாமும் வரிசைப்படுத்தப்பட்டன. அதற்குள்ளும் ஆயிரம் சிக்கல்கள், இழுபறிகள், பிரச்சினைகள்.

ஆனாலும் என்னதான் நடந்தாலும் நமது நூலகத்தை மீளவும் இயங்க வைக்க வேண்டும் என்பதில் மக்கள் குறியாக இருந்தார்கள். அதனால் அத்தனை தடைகளையும் தாண்டி இன்று எம் சமூகத்தின் அறிவின் மையப்புள்ளியாக மறுபடியும் யாழ். பொதுநூலகம் எழுந்து நிற்கின்றது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை உத்தரவின் பின் இந்தியர்கள் வருகை தரவில்லை

(கொழும்பு)

இந்திய பயணிகள் வருகைக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவினைத் தொடர்ந்து இந்தியர்கள் எவரும் இலங்கைக்கு வரவில்லை என்று விமான நிலையம் மற்றும் விமான போக்குவரத்து ஆணையகம் தெரிவித்துள்ளது.



இந்தியாவில் கொவிட்-19 நிலைமைகள் காரணமாக மே 6 முதல் இந்தியாவிலிருந்து வருகை தரும் அனைத்து பயணிகளுக்கும் தடை விதிக்கப்பட்டது.

எனினும் சரக்கு விமான சேவையானது தொடர்ந்தும் இடம்பெறுகின்றது. (நி)

# இலங்கைக்கு புரூணை பயணத்தடை

(கொழும்பு)

தெற்காசியா முழுவதும் கொவிட்-19 பரவல்கள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து புரூணை தனது பயணத் தடை பட்டியலில் பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைப் புதிதாக இணைத்துள்ளது.

அந்நாட்டு பிரதமர் அலுவலகம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்

## விரதங்கள்



## துன்பங்களை போக்கும் பைரவர் விரதம்

(தொடர்ச்சி)

தினமும் பைரவர் காயத்ரியையும் பைரவி காயத்ரியையும் சொல்லி வந்தால் செல்வம் பெருகும். கோரிக்கைகளை நம்பிக்கையுடன் பைரவரிடம் வைக்கும் போது அது 30 தினங்களுக்குள் நிறைவேறுகிறது என்கிறது பைரவ புராணம்.

**கால பைரவ அஷ்டமி மகிமை**

கார்த்திகை மாதம் தேய்பிறை அஷ்டமி திதி பைரவருக்கு ஜென்ம அஷ்டமி ஆகும். இதனை கால பைரவாஷ்டமி என்பர். இரு பைரவரை தேவர்கள் பூஜிக்கும் நாள்.

அன்று பைரவர் வழிபாடு நற்பலன்களைத் தரும். தை மாதம் முதல் தொடங்கி ஒவ்வொரு செவ்வாய், சனிக்கிழமையும் பைரவருக்கு பஞ்சதீபம் ஏற்றி கார பைரவ அஷ்டகம் படித்து வந்தால் எதிரிகள் அழிவர். கடன்கள் தீரும். எம பயம் விலகும்.

**ஸ்ரீபைரவர் காயத்ரி**

ஓம் திகம்பராய வித்மஹே
தீர்கஸிஷ்ணாய தீமஹி
தந்நோ பைரவ; ப்ரசோதயாத்.

**நீங்காத செல்வம் நிறைந்து விளங்க**

வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் 12 மணிக்குள் கால பைரவருக்கு நமது பெயரில் அர்ச்சனை செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் போது சந்தனாதி தைலம், அத்தர், புனுகு, ஜவ்வாது, சிவப்பு அரளி மாலை அல்லது பூக்களைச் பூசாரியிடம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு 62 வெள்ளிக்கிழமைகளுக்கு தொடர்ந்து வழிபாடு செய்து வர வேண்டும். 31 வெள்ளிக்கிழமைகள் முடிந்த பின்னர் குறைந்தது ஒரு ஏழைப் பெண்ணுக்கு தாலியில் தங்கம் செய்து கொடுக்க வேண்டும்.

ஏழைப்பெண்கள் அவர்கள் குலவழக்கப்படி கொடுத்தால் பைரவர் அருளாசி கிடைக்கும். பல மடங்கு செல்வம் பெருகும். அந்தச்செல்வம் நம்மிடம் நீங்காது நிறைந்து விளங்கும்.

**பைரவர் புகழ்பெற்ற கோவில்கள்**

1.காஞ்சீபுரம், 2.சீர்காழி சட்டநாதர் கோவில், 3.பைரவன் பட்டி, 4.பைரவபுரம், 5.திருவாஞ்சியம், 6.திருச்சேறை, 7.ஆலூர், 8.காளஹஸ்தி, 9.இலுப்பைக்குடி.

**வளம் சேர்க்கும் பைரவ தீபம்**

பைரவருக்கு சிறு துணியில் மிளகைக் கட்டி நல்லெண்ணெய் தீபத்தை ஏற்றி வழிபட்டால் வாழ்க்கையில் வளம் பெருகும். தேங்காய் மூடியில் நெய் நிரப்பி தீபம் ஏற்றி வழிபட்டால் ஆரோக்கிய வாழ்வு அமையும். சந்தனக்காப்பு செய்து வழிபட்டால் எந்நாளும் இன்ப நாளாக அமையும்.

பைரவருக்கு சர்க்கரைப் பொங்கல், தயிர் சாதம், தேன், செவ்வாழை, வெல்லம், பாயசம், அவல் பாயசம், உளுந்து வடை, சம்பா அரிசி சாதம், பால், பழ வகைகள் பிடித்தமானவை. அவற்றை நைவேத்தியமாகப் படைக்கலாம்.

**சனிக்கு பட்டம் வழங்கிய பைரவர்**

எமதர்மனும் சனியும் சூரியபகவானின் மகன்கள். இதில் எமதர்மர் அழகானவர். சனி ஊனமானவர். இதனால் எமன் அவரை அலட்சிப்படுத்தினார். மன வேதனை அடைந்த சனி, தனது தாயார் சாயா தேவியிடம் சென்று வருத்தப்பட்டார். "நீ! பைரவரை உள்ளன் போடு வழிபட்டு வா! அவர் நல்வழி காட்டுவார்" என்றார்.

தாயாரின் அறிவுரைப்படி சனி பைரவரை வழிபட்டு வந்தார். இதனால் மன மகிழ்ந்த பைரவர் சனியின் பெருமையை உலகத்திற்கு எடுத்துக்காட்ட அவருக்கு ஈஸ்வரன் பட்டம் அளித்தார்.

மேலும் நவக்கோள்களில் சக்தி மிக்கவராக ஆக்கினார். ஆகவே சனீஸ்வரனின் குருநாதரான பைரவரை வழிபட்டால் ஏழரைச் சனி, அஷ்டமச்சனி, கண்டச்சனி, ஜென்மச்சனி, அர்த்தாஷ்டமச் சனி போன்ற தோஷங்கள் விலகி விடும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதி மீறல்; இதுவரை 10,073 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இதுவரையான காலப்பகுதியில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த குற்றச்சாட்டுக்காக நேற்று முன்தினம் மாத்திரம் 223 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக 10 ஆயிரத்து 73 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி)

## 185,000 ஸ்புட்னிக் வீ

(கொழும்பு)

இலங்கைக்கு ரஷ்யாவிடமிருந்து 185,000 ஸ்புட்னிக் வீ தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன. அடுத்த செவ்வாய்க்கிழமை இவை இலங்கைக்குக் கிடைக்கும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (நி)

## இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள பல அரச இணையத்தளங்கள் மீது நேற்று சைபர் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக இலங்கை கணனி அவசர தயார்நிலைக் குழு ஒருங்கிணைப்பு மையம் உறுதிப்படுத்தியுள்ளது.

அதன்படி இலங்கை சுகாதார அமைச்சகம் இலங்கை மின்சார சபை, ராஜரட்ட பல்கலைக்கழகம் மற்றும் சீன தூதரகம் ஆகியவற்றின் இணையத்தளங்கள் மீதே சைபர் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் சைபர் தாக்குதலுக்குள்ளான இரண்டு இணையத்தளங்கள் இலங்கை கணனி அவசர தயார்நிலை அணியில் உள்ள தகவல் பாதுகாப்பு பொறியாளர்களால் இணையத்தளங்கள் மீண்டும் சரி செய்யப்பட்டுள்ளன. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 130 | 100 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 140 | 90 | 120 | 150 |
| தக்காளி | 240 | 250 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 140 | 120 | 140 | 140 |
| கரட் | 150 | 240 | 160 | 200 |
| பூசணி | 40 | 40 | 30 | 40 |
| புடோல் | 100 | 140 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 240 | 220 | 320 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 160 | 240 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 160 | 130 | 140 | 160 |
| பயற்றங்காய் | 120 | 140 | 80 | 100 |
| லீக்ஸ் | 160 | 150 | 140 | 160 |
| பீற்றூட் | 100 | 80 | 80 | 120 |
| கறிமிளகாய் | 140 | 120 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 400 | 600 |
| போஞ்சி | 180 | 240 | 200 | 280 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 80 | 120 |
| கீரை - 1 பிடி | 60 | 70 | 30 | 40 |
| தேசிக்காய் | 160 | 140 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 260 | 200 | 200 | 250 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | 80 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தனது உதவிப்பால நிதியினூடாக எஸ். செல்வரட்ணம் என்பவரின் பழுதடைந்த முச்சக்கரவண்டியை 80 ஆயிரம் ரூபாய் செலவில் திருத்தியமைத்துக் கொடுத்தார்.

# அறிகுறிகள் காணப்படின் உடன் தொடர்பு கொள்ளவும்

## சுகாதார வைத்திய அதிகாரி

(கரணவாய்)

நெல்லியடி சந்தைக்கு அருகாமையில் வெற்றிலை வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரி ஒருவருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே குறித்த வியாபாரியிடம் வியாபாரம் செய்தவர்கள் நோய் அறிகுறிகள் தென்படின் உடனடியாக தமது சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் நெல்லியடி பகுதியில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி செந்தூரன் தலைமையிலான சுகாதார பரிசோதகர்கள் குழுவினர் முகக் கவசம் அணியாதவர்கள் பலரை சுய தனிமைப்படுத்தி வைக்குமாறு அந்தந்த பகுதி சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த வியாபாரியும் முகக் கவசம் அணியாமையால் அவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். நேற்று அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே குறித்த நபரிடம் நெல்லியடியில் பலர் வாடிக்கையாளர்களாக இருப்பதனால் நோய் அறிகுறிகள் காணப்படின் உடனடியாக அறிவிக்குமாறு சுகாதார வைத்திய அதிகாரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-60)

# வழமைக்கு திரும்பியது கொடிகாமம்

(சாவகச்சேரி)

அதிகரித்த கொரோனா தொற்றாளர்கள் காரணமாக முடக்கப்பட்ட கொடிகாமம் பொதுச்சந்தை மற்றும் நகரம் ஆகியவற்றுடன் முடக்க நிலையில் இருந்த கொடிகாமம் மத்தி மற்றும் கொடிகாமம் வடக்கு ஆகிய இரண்டு கிராமங்களும் நேற்று தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி தொடக்கம் முடக்கப்பட்ட கொடிகாமம் பொதுச்சந்தை மற்றும் கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் தனிமைப்படுத்தப்பட்ட இரண்டு கிராமங்கள் ஆகியனவே இவ்வாறு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டு சுகாதார நடைமுறைகளுடன் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. (5-30)

# நகரசபை முடக்கம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை செயலாளருக்கு கொரோனா தொற்று கடந்த திங்கட்கிழமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று முதல் நகரசபை செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருப்பதுடன் நகரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் அனைவரும் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (5-30)

# வாகனம் மோதி இளைஞன் காயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கரம்பகம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜே.சி.பி. வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியன நேருக்கு நேராக மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-30)

# இடைநிலை சிகிச்சை நிலையம் மன்னாரில் இன்று முதல் ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களை சுய தனிமைப்படுத்தி சிகிச்சையளிக்கும் வகையில் மன்னார் தாராபுரம் துருக்கி சிட்டியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையத்தின் சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட உள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரே நேரத்தில் நூறு தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் இடைநிலை சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 543 ஆவது படைப்பிரிவின் உதவியுடன் தயார்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிகிச்சை நிலையத்தின் பணிகள் நிறைவடைந்துள்ள குறித்த நிலையத்தில் சிகிச்சை வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட உள்ளது என அவர் தெரிவித்தார். (4-8-285)

# வீட்டில் தீ விபத்து; பொருட்கள் தீக்கிரை



(முறிகண்டி)

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் வீடு ஒன்றில் நேற்றுக் காலை 11 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. இதனை அடுத்து பிரதேச மக்கள் குறித்த தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர்.

இதேவேளை குறித்த பகுதிக்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும் குறித்த தீ விபத்தில் வீட்டு பாவனை பொருட்கள் உள்ளிட்டவை தீக்கிரையாகியுள்ளன.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (4-8-100)

# மரண அறிவித்தல்

பிறப்பு 25 ❖ 07 ❖ 1939



இறப்பு 18 ❖ 05 ❖ 2021

## அமரர். வல்லிபுரம் முத்துலிங்கம்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட லிகிதர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

அல்லையம்பதி துன்னாலை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வல்லிபுரம் முத்துலிங்கம் அவர்கள் நேற்று 18.05.2021 செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், முருகேசு- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், பாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், தணிகாசலம், இராசரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரனும், வசந்தி (அமரர்), இரவிச்சந்திரன் (மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர், பருத்தித்துறை), ஜெயச்சந்திரன் (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), செல்வச்சந்திரன் (ஆசிரியர், யா/ ஹாட்லிக் கல்லூரி) அவர்களின் அன்புத் தந்தையாரும், வதனி, விமலா, நீரஜா அவர்களின் அன்பு மாமனாரும், ராகுலன் (மாணவன்-விவசாய தொழில்நுட்பபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), ராகவன் (மாணவன்- பொறியியல் பீடம், மொரட்டுவ பல்கலைக்கழகம்), அபிதாரணி (மாணவி, பிரயோக விஞ்ஞானபீடம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்), சாரங்கன் (மாணவன்- பொறியியல் பீடம், பேராதனைப்பல்கலைக்கழகம்), ஸ்ரீமன் (மாணவன்- யா/ஹாட்லிக் கல்லூரி), ஸ்ரீநிதி (மாணவி-யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 18.05.2021 மதியம் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று மாலை 4.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
இரவிச்சந்திரன்- 077 618 1659, ஜெயச்சந்திரன்- 077 666 0484
செல்வச்சந்திரன்- 077 224 2405

(C-2173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிரமங்களுடன் பாடுபட்டு அவற்றை வெல்வது மனித நலன்களில் மிகச் சிறந்தது!*

*~ சாமுவேல் ஜான்சன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஓர் அவசர மடல்

யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்துக்கு அன்பு வணக்கம்.

உங்களின் மருத்துவப் பணிக்கு என்றும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

தவிர, இவ் அவசர மடலை எழுத வேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாததாயிற்று.

பொதுவில் இன்றைய வடமாகாண நிர்வாகம் மாலுமி இல்லாத கப்பல் பயணம் போல நடந்தாகிறது.

அவரவர் தத்தம்பாடு. நிர்வாகப் பணிகள் எப்படியாக இருக்கிறது என்பதை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் கவனிப்பது போலத் தெரியவில்லை.

இருந்தும் ஓரளவு திருப்தியாகச் சேவையாற்றிய யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கொரோனாத் தொற்றுக்குப் பின் கந்தறுந்து காவடி எடுப்பது போலத் தெரிகிறது.

தேவையில்லாத விடயங்களில் தலைப்பட்டு தேவையுள்ள வேலைகளையும் செய்ய முடியாத நிலைக்கு யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் வந்துவிட்டது.

இதற்கு நல்ல உதாரணம் கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் உள்ள கொரோனா சிகிச்சை நிலையமாகும்.

ஆளுந்தரப்பிடம் நல்ல பெயர் வாங்க வெளிக்கிட்டு இன்று கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் உள்ள கொரோனா சிகிச்சை நிலையம் சீ... என்று போகிறது.

உண்மையில் வடக்கு மாகாண சுகா தாரத் திணைக்களம் பார்க்க வேண்டிய வேலையை"யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் பார்க்க முற்பட்டதால் வந்த வினை இது.

இதுதவிர, இப்போது கொரோனாப் பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் முன்னைய வெளிநோயாளர் பகுதிக்கு முன்பாக நடைபெறுகிறது.

எந்தவித ஒழுங்கு கட்டுப்பாடுகளும் அங்கு இல்லை. அதிலும் மிகப்பெரும் நாசகாரம் பிசிஆர் பரிசோதனைக்கு வருகின்ற வெளியாட்களையும் யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களையும் ஒன்றாகச் சேர்த்து பிசிஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் நடத்தப்படுவதாகும்.

இதில் இன்னும் மோசம் அத்தனை பேருக்கும் முன்பாக பெயர் கூவி அழைத்து; உங்களுக்கு கொரோனா பொசிற்றிவ் என்று அறிவிப்பதாகும்.

அடிப்படை மனிதாபிமானம் இல்லாத அளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நடக்கின்ற இந்த விடயத்தை சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்க எவரும் இல்லை என்பதுதான் மிகப் பெரும் துன்பம்.

உண்மையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு பிசிஆர் பரிசோதனை செய்வதாக இருந்தால், அவர்கள் தங்கியுள்ள விடுதிகளில் வைத்து அல்லது அதற்கென ஒதுக்கப்பட்ட விசேட அறைகளில் வைத்து பிசிஆர் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

இதைவிடுத்து, வெளியாருடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கியிருக்கின்ற நோயாளர்களையும் சேர்த்து நீண்ட நேரம் அவர்களை நிற்க வைத்து பிசிஆர் பரிசோதனை செய்வது அந்த நோயாளர்கள் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகக் கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும்.

எனினும் இதுவிடயங்களில் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் அசமந்தமாக இருக்கிறது என்பதுதான் இங்கு வேதனைக்குரியது.

எதுஎவ்வாறாயினும் கொரோனாத் தொற்றுப் பரவினால் பரவட்டும் என்பது போல எவர் நடந்து கொண்டாலும் அது மிகப் பெரும் பாவச் செயல் என்பதுதான் உண்மை.

# தமிழினம் அழிக்கப்பட்ட உண்மையை ஏற்று

# தமிழர்களிடம் மன்னிப்பு கேட்க சிங்கள தலைவர்களுக்கு அருகதையில்லை

## பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

தமிழினம் அழிக்கப்பட்டமை உண்மையென ஏற்றுக் கொண்டு அதற்காக மன்னிப்புக் கேட்கும் அளவிற்கு ஒரு சிங்களத் தலைவருக்கேனும் தகுதி இல்லையெனவும் இந்த நாட்டில் தமிழர்களுக்கு எதிராக இடம் பெற்ற இன அழிப்பிற்கான நியாயமும், நீதியும் சர்வதேசத்தின் மூலமாகவே கிடைக்கப்பெற வேண்டும் எனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் என்.சிறீதரன் சபையில் தெரிவித்ததுடன், இப்போதைய ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்பு செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரைக்கும் இந்த மண்ணில் தமிழர்கள் கொத்துக் கொத்தாக அழிக்கப்பட்டனர் எனவும் குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் கூறுகையில், இன்றைய நாள் (நேற்று) ஈழத் தமிழர் வரலாற்றில் இரத்தமும் கண்ணீரும் தோய்ந்த வாழ்நாளில் மறக்க முடியாத நாளாகும். இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தை தாம் வெற்றி கொண்டதாகவும் அதன் மூலமாக நாட்டை கைப்பற்றியதாகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சபையில் தெரிவித்தாரே தவிர, யுத்தத்திற்கு பின்னர் சமாதானத்தை வெற்றி கொள்வதிலோ அல்லது சமாதானத்தை கட்டி வளர்ப்பதிலோ தங்களால் என்ன செய்ய முடிந்தது என்ற விடயத்தை அவரால் சபையில் முன்வைக்க முடியவில்லை.

70 ஆண்டுகளாக இந்த மண்ணில் இனப்படுகொலைகள் இடம்பெற்று 12 ஆண்டுகளுக்கு முன்னர் முள்ளிவாய்க்கால் வரையில் இந்த மண்ணில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

மறைந்த பேராயர் இராயப்பு ஜோசப்பும் நல்லிணக்க ஆணைக் குழுவிற்கு முன்னால் தனது சாட்சியத்தை பதிவு செய்திருந்தார். இவ்வாறு 12 ஆண்டுகள் கடந்து வந்திருந்தாலும் இன்றைய தினம் (நேற்று) முள்ளிவாய்க்கால் தினமாக தமிழர்கள் நினைவு கொள்வதற்கும், நினைவுத் தூபிக்கு சென்று தமது உறவுகளை நினைப்பதற்கும் தடுக்கப்படுகின்ற ஒரு நாளாக அமைந்துள்ளது. எமது மக்கள் வணங்குகின்ற சாதாரண நினைவிடத்தைக் கூட இராணுவத்தினரும் பொலிஸாரும் அடித்து நொருக்கி சிதைத்துள்ளனர்.

நினைவுத் தூபியின் அருகில் உள்ள சப்பாத்துக்கால்கள் இராணுவ சப்பாத்துக்கால்கள் என்பது ஊடகங்களில் தெளிவாக கூறப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** அறுகுவெளி, மறவன் புலவு, மறவன்புலவு மத்தி, தனங்கிளப்பு, ஐஸ் தொழிற்சாலை பொலிகண்டி, பாரதி வீதி கம்பர் மலை, இலந்தைக்காடு, கணபதி ஆலை கொற்றாவத்தை, கொற்றாவத்தை, நாச்சிமார் கோவிலடி, பொலிகண்டி, நவிண்டில்-உடுப்பிட்டி வதிரி வீதி, நெடியகாடு, பழைய காவல் நிலையம் வல்வெட்டித்துறை, பொலிகண்டி, உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை சந்தி, வல்வெட்டித்துறை- சிவன் கோவில் வீதி, வல்வெட்டித்துறை வன்னிச்சி, வல்வெட்டித்துறை வீதி கல்லறைக்கு அருகில் உடுப்பிட்டி, வெள்ளை வீதி உடுப்பிட்டிச் சந்தி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை- காத்தான் கோட்டம், மறக்காறம் பளை- கணேசபுரம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** பூவரசங்குளம் பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும். (ரி-4)

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

ஸ்ரீராமகிருஷ்ணர்: 'நீ என்ன சொல்கிறாய்? களிமண் பொம்மையா? அது உணர்வு வடிவம் ஆயிற்றே.'

'உணர்வு வடிவம்' என்ற கருத்தை ம-வினால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ம-: 'களிமண் உருவத்தை வழிபடுபவர்களுக்கு, முதலில், களிமண் உருவம் கடவுள் அல்ல என்பதைப் புரியவைக்க வேண்டும். அதோடு, அந்த உருவத்தில் இறைவனை நினைத்துத் தான் பூஜை செய்ய வேண்டுமே தவிர களிமண்ணிற்குப் பூஜை செய்வது சரியல்ல.'

ஸ்ரீராமகிருஷ்ணர் (வெறுப்புடன்): 'கல்கத்தாவாசிகளாகிய உங்களுக்கு இது ஒரு பொழுதுபோக்காகிவிட்டது லெக்சர் செய்வதும் புரியவைப்பதும் ஒரு தொழிலாகவே போய்விட்டது. தான் உண்மையை அறிவது எப்படி என்று ஒருவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. புரிய வைப்பதற்கு நீங்கள் யார்? இந்தப் புவனங்கள் அனைத்தும் யாருக்குச் சொந்தமோ அவர் புரிய வைப்பார். இந்த உலகை யார் படைத்தாரோ, யார் சூரியன், சந்திரன், மனிதர்கள், ஏனைய உயிரினங்கள் அனைத்தையும் படைத்தாரோ, உயிரினங்களின் உணவிற்கு வழிவகை செய்து வைத்தாரோ, அவற்றை வளர்த்துக் காக்க தாய்தந்தையரைப் படைத்தாரோ, அந்தத் தாய் தந்தையரிடம் பிள்ளைகள்மீது பாசத்தையும் வைத்தாரோ அவர் புரிய வைப்பார். எதற்கெல்லாமோ வழிவகை செய்துள்ள அவர் இதற்கொரு வழி செய்யாமல் போவாரா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2021-14.06.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்பூரி சிங்காரம்



மிதுன இராசி வாசகர்களே!

## எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து செய்வது நல்லது

பிலவ வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே செவ்வாய் வீற்றிருந்து அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் சனியைப் பார்க்கின்றார். எனவே மிகமிக கவனத்தோடு செயற்பட வேண்டிய மாத மாகும். எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

**சனியின் வக்கிர இயக்கம்**

உங்கள் இராசிக்கு 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அஷ்டமாதிபதி வக்கிரம் பெறுவது நன்மைதான். ஸ்தம்பித்து நின்ற தொழில் சூடுபிடிக்கும். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைந்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொடுக்க முன்வருவர். பழைய பாக்கிகள் வசூலாகும். அதேநேரம் 9 ஆம் இடத்திற்கு அதிபதியாக சனி விளங்குவதால் தந்தை வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும்.

**செவ்வாய்-சனி பார்வைக் காலம்**

உங்கள் இராசியிலேயே செவ்வாய் சஞ்சரிக்கின்றார். அவர் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் சனியைப் பார்க்கும் பொழுது, உத்தியோக பிரச்சினை தலைதூக்கும். உயர் அதிகாரிகளின் ஆதரவு குறையும். மருத்துவச் செலவு, ரண சிகிச்சை என்று மனக்கலக்கம் அடைவீர்கள். வாகனங்களால் தொல்லை உண்டு. உடன்பிறப்புகள் உங்களுக்கு எதிர்க்கருத்துக்களை தெரிவிக்கலாம். யாரை நம்பியும் இக் காலத்தில் செயற்பட இயலாது.

**புத-சுக்கிர யோகம்**

உங்கள் இராசிநாதனாகவும் 4 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் புதன். 5, 12 இற்கு அதிபதியாக விளங்குபவர் சுக்கிரன். இவை இரண்டும் இணையும் பொழுது புத-சுக்கிர யோகம் செயற்படும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்பட புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள். தொழில் வளர்ச்சியில் குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர். வராத சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். உத்தியோகத்தில் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். வெளிநாட்டிலிருந்து அனுகூலமான தகவல் வந்து சேரும்.

**மிதுன-சுக்கிரன் சஞ்சாரம்**

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு




சுக்கிரன் செல்கின்றார்.

அங்குள்ள செவ்வாயோடு இணைந்து சுக்கிர மங்கள யோகத்தை உருவாக்குகின்றார்.

இதன் விளைவாக பிள்ளைகளுக் கான கல்யாண வாய்ப்பு கைகூடும். உடன்பிறப்புகள் உங்கள் எண்ணங்களைப் பூர்த்தி செய்வர். கடன் சுமை குறையும். கட்டடம் கட்டும் முயற்சியில் இருந்த தடைகள் அகலும். உத்தியோகத்தில் எடுத்த புது முயற்சி வெற்றி தரும்.

**கடக-செவ்வாய் சஞ்சாரம்**

ஜூன் 3 ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுவதால் சில நன்மைகளும் உங்களுக்கு உண்டு. ஆறாமிடத்திற்கு அதிபதியான செவ்வாய் நீச்சம் பெறும் பொழுது வாங்கிய கடனைக் கொடுத்து மகிழும் வாய்ப்பு உண்டு. வருங்கால முன்னேற்றம் கருதி சில முயற்சிகளைச் செய்வீர்கள். செவ்வாய், சனி பார்வையால் ஆரோக்கியத் தொல்லை உண்டு. இம்மாதம் புதன்கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உண்டு. மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாததாக அமையும். ஊர் மாற்றம், வீடு மாற்றம் பற்றிச் சிந்திப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பது சந்தேகம்தான். பணிபுரியுமிடத்தில் சகப் பணியாளர்களால் தொல்லை உண்டு. கேட்ட சலுகைகள் தாமதமாக கிடைக்கும்.



கடக இராசி வாசகர்களே!

## ஆரோக்கியத் தொல்லைகளும் மருத்துவச் செலவுகளும் ஏற்படலாம்

பிலவ வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் விரய ஸ்தானத்தில் யோகாதிபதி செவ்வாயோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். அதே நேரத்தில் அஷ்டமத்தில் குருவும் கண்டகச் சனியின் ஆதிக்கமும் இருக்கின்றது. எனவே ஆரோக்கியத் தொல்லைகளும் மருத்துவச் செலவுகளும் ஏற்படலாம்.

**சனியின் வக்கிர இயக்கம்**

உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அவர் வக்கிரம் பெறும் பொழுது குடும்பத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் இழப்புகள் ஏற்படலாம். அதேசமயம் 8 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால் சில நன்மைகளும் ஏற்படும். திடீர் வரவும் உண்டு. இடமாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

**செவ்வாய்-சனி பார்வைக் காலம்**

உங்கள் இராசிக்கு செவ்வாய் யோகம் செய்யும் கிரகமாகும். அவர் சனி பகவானை மாதத் தொடக்கத்திலேயே பார்க்கின்றார். பஞ்சமாதிபதி விரய ஸ்தானத்தில் இருப்பதால் பிள்ளைகளால் விரயம் உண்டு. அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. அதேநேரத்தில் உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியை, செவ்வாய் பார்ப்பது அவ்வளவு நல்லதல்ல. விற்ற சொத்துக்களில் வில்லங்கங்கள் இருப்பதாக வழக்குகள் வரலாம்.

**புத-சுக்கிர யோகம்**

உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அதேநேரத்தில் சுக லாபாதிபதியாக விளங்குபவர் சுக்கிரன். இவை இரண்டும் லாப ஸ்தானத்தில் ஒன்றுசேரும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே புத சுக்கிர யோகம் உருவாகின்றது. குடும்பத்தில் சுபகாரியப் பேச்சு கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மறுக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் கிடைக்கலாம். உயர் அதிகாரிகளின் பழக்கத்தால் ஒருசில வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள இயலும். வெளிநாட்டிலுள்ள நல்ல நிறுவனங்களிலிருந்து பணிபுரிய வாய்ப்புகள் வரலாம்.




**மிதுன-சுக்கிரன் சஞ்சாரம்**

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். இக்காலத்தில் கூடுதல் கவனம் தேவை. உங்கள் இராசிக்கு லாபாதிபதியான சுக்கிரன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வரவைக் காட்டிலும் செலவு கூடுதலாக இருக்கும். வருங்காலத்தைப் பற்றிய பயம் அதிகரிக்கும். ஆதாயமில்லாத அலைச்சல்கள் உண்டு. உத்தியோகத்தில் இனிமை தராத மாற்றங்கள் ஏற்படலாம். பிள்ளைகளால் ஒரு பெரும் விரயம் ஏற்படும்.

**கடக-செவ்வாய் சஞ்சாரம்**

ஜூன் 3 ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுவதால் மிகமிக கவனம் தேவை. கண்டகச் சனியை நேரடியாகச் செவ்வாய் பார்க்கப் போகின்றார். இதனால் உடல்நலனில் சீர்கேடுகள் உருவாகும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்ய இயலாது. மற்றவர்களின் செயற்பாடுகளால் மனக் கலக்கம் அதிகரிக்கும்.

இம்மாதம் திங்கட்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் வரவைக் காட்டிலும் செலவு கூடும். வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ஆரோக்கியத் தொல்லைகளும், மருத்துவச் செலவுகளும் அதிகரிக்கும்.

உடன்பிறப்புகளின் அனுசரிப்பும், தாயின் உதவியும் ஓரளவு கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பது அரிது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலூட்டும்...

நோயியல் பிரிவின் தலைவர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்கு எதிராக விசேட காரணிகள் எதுவும் இல்லாத தாய்ப்பால் ஊட்டும் அனைத்து தாய்மார்களும் மற்றவர்களைப் போன்று கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

எனினும், கர்ப்பவதிப் பெண்களுக்குத் தடுப்பூசி வழங்குவது தொடர்பில் இதுவரை எவ்வித ஆய்வுகளும் முன்னெடுக்கப்படாத நிலையில் அவர்களுக்குத் தடுப்பூசியைப் பெற்றுக் கொடுப்பது குறித்து வைத்தியர்களால் முழுமையான பரிந்துரைகள் வழங்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## தடைகளைத்...

மேலும் இராணுவம் மற்றும் பொலிஸார் பலத்த கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நிலையிலும்கூட வேலன் சுவாமிகளோடு இணைந்து பொதுமக்கள் சிலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உறவுகளை நினைந்து அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

அத்துடன் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற படுகொலையின் நினைவாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி மக்கள் பேரியக்கத்தால், ஒரு இலட்சத்து நாற்பத்தாறாயிரம் மரக்கன்றுகள் நாட்டும் திட்டத்துக்கு அமைவாக, முதலாவது ஆலமரக் கன்று ஒன்றினை குறித்த நிகழ்வின் போது வேலன் சுவாமிகள் நாட்டியுள்ளார். (ம-3,33,281)

## யாழ்ப்பாணத்தில்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

அவர் உயிரிழந்த நிலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த நபருக்கு தொற்று இருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## வடமராட்சியில்...

தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

நெல்லியடியிலுள்ள பிரபல வெதுப்பகத்தில் கொரோனாத் தொற்றாளர்களுடன் இனங்காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு இருந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 34 பேர் இனங்காணப்பட்டுள்ளதுடன், உடுப்பிட்டியைச் சேர்ந்த ஒருவரும் பருத்தித்துறை நகர சபை ஊழியர்கள் இருவரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

மேலும் வதிரிச்சந்திப் பகுதியில் பழக்கடை வைத்திருக்கும் ஒருவரும் தனிமைப்படுத்தப்பட்டு மேற்கொண்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்கள் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் இனங்காணப்பட்டனர். (ம-3,60)

## மதுச்சாலையில்...

நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் இளைஞன் மீது கத்திக்குத்து நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் படுகாயமடைந்த குணராசா நிதர்ஸன் (வயது-25) என்ற இளைஞன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா சம்பவ இடத்தையும் சடலத்தையும் பார்வையிட்டு விசாரணை நடத்தியுள்ளார்.

இதேவேளை கத்திக்குத்து தாக்குதல் நடத்திய நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-3,281)

## பாராளுமன்ற...

இரா.சாணக்கியன் தனது முகப்புத்தகத்தில் புகைப்படங்களைப் பகிர்ந்துள்ளார்.

மேலும் குறித்த பதிவில், "முள்ளிவாய்க்கால் 12ஆவது ஆண்டு நினைவு நாள் வடக்கு - கிழக்கின் பல பகுதிகளிலும் தமிழர் பகுதிகளிலும் நேற்று செவ்வாய்க் கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே நேற்றைய தினம் நானும் எமது கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் பாராளுமன்ற வளாகத்தில் கறுப்பு உடை அணிந்து மெழுகுதிரி ஏந்தி அஞ்சலி செலுத்தினோம்" என்று பதிவிட்டுள்ளார். (ம-3)

## வெற்றிலைக்கடை...

உள்ள வெற்றிலைக் கடைகள் அனைத்தும் முடக்கப்பட்டிருக்கின்றன.

சந்தைக் கட்டடத் தொகுதியில் காணப்பட்ட 32 கடைகளில் 25 வெற்றிலை கடைகளும் 7 தேங்காய் கடைகளும் உள்ளடங்குகின்றன.

குறித்த கடை உரிமையாளர் 6 நாட்கள் கடைக்கு சமுகமளிக்கவில்லை எனவும், நேற்றைய தினம் கடைக்கு வருகை தந்தபோது அவருக்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட நிலையில் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.(ம-3,100,316)

## +2,478...

துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணி உடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரையில் 147,680 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## யாழ்.சுதுமலை...

தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

ஆலயத்தின் கொடியேற்றம் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றிருந்த நிலையில் ஆலயத்தின் குருக்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தார்.

இதனையடுத்து வேறொரு குருக்கள் மூலம் திருவிழா தொடர்ந்தும் நடைபெற்றிருந்த நிலையில் 2ஆவது குருக்களுக்கும் கொரோனா தொற்று உறுதியானதை தொடர்ந்து, ஆலயம் தற்காலிகமாக முடக்கப்பட்டிருப்பதுடன், திருவிழாவில் கலந்து கொண்டிருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். (ம-3)

## நினைவேந்தல்...

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கோவிட்-19 தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கு அமைய மக்களைத் திரட்டாமல் பல்வேறு இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில், பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் தடைகளை மீறி நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் பலத்த இராணுவ, பொலிஸ் மற்றும் புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்களை மீறி முள்ளிவாய்க்கால் மண்ணில் வேலன் சுவாமிகள் உறவுகளுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார். அத்துடன் உயிரிழந்த உறவுகளின் நினைவாக மரக்கன்று ஒன்றினையும் நாட்டினார்.

முல்லைத்தீவில் பாதுகாப்பு கெடுபிடிகளையும் தாண்டி வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

முல்லைத்தீவு நந்திக் கடலோரம் எம்.கே.சிவாஜிலிங்கம், பீற்றர் இளஞ்செழியன், நிசாந்தன் ஆகியோர் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் மாநகர சபையில் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தலைமையில் [illegible] உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டு உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கிளிநொச்சி யூனியன்குளம் பகுதியில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்திலேயே இந்த அஞ்சலி நிகழ்வினை அவர் செய்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் அலுவலகத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றில் மெழுகுவர்த்தி ஏற்றி உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை செயலகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.இதன்போது முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் கொல்லப்பட்ட உறவுகளுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் என சிலர் கலந்துகொண்டனர்.

இதனிடையே, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-3,18,33)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1680 திகதி 2021.05.18
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 15 54 62 63
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 18/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0839
வெற்றி எழுத்து F சுப்பர் இலக்க 15 வெற்றி இலக்கங்கள் 20 21 23 78

மஹஜன சம்பத
திகதி 2021/05/18
சீட்டிழுப்பு இலக்கம் 4484
ஆங்கில எழுத்து H வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 9 9 7 2 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 18.05.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2779
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 05 06 13 67
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.05.18
சீட்டிழுப்பு இலக்கம் - 521
S 02 06 22 39
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: செவ்வாய் சீட்டிழுப்பு இல: 1281 வர்ணம் : இள நீலம் சீட்டிழுப்பு திகதி: 18.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 134,010,125
வெற்றி இலக்கங்கள் 09 20 32 52 ஆங்கில எழுத்து Y
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: செவ்வாய் சீட்டிழுப்பு இல: 3611 வர்ணம் : இள நீலம் சீட்டிழுப்பு திகதி: 18.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 40,021,601
வெற்றி இலக்கங்கள் 08 14 21 51 ஆங்கில எழுத்து X
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 2,983,744/=
திகதி : 18.05.2021 வெற்றி வாரம் : 3162 வர்ணம் : சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 35 57 60 62 விருச்சிகம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,036,000

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1455 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 18/05/2021 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Q 09 31 45 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் 56,241,499/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

சீட்டிழுப்பு வாரம் 727 வர்ணம் இளஞ் சிவப்பு திகதி 18.05.2021 செவ்வாய்
H 02 25 49 66
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,722,680
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 மாவட்டங்களில் கொரோனா மேலும் பரவக்கூடிய பேராபத்து

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



**(கொழும்பு)**

**இலங்கையில் தற்போதைய நிலையில் எட்டு மாவட்டங்களில் கொரோனா வைரஸ் தொற்று பரவக்கூடிய பேராபத்து காணப்படுகின்றது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

**அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது. "நாளாந்தம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், காலி, நுவரெலியா, கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் அடையாளம் காணப்படுகின்றனர்.எனவே, குறித்த மாவட்டங்களில் கொரோனாத் தொற்று மேலும் பரவக்கூடிய பேராபத்தான நிலை காணப்படுகின்றது.

எதிர்வரும் வார நாட்களில் கம்பஹா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். இதனைக் கருத்திற்கொண்டு நாட்டிலுள்ள அனைத்து மக்களும் மிகவும் பாதுகாப்பான முறையில் செயற்பட வேண்டும். கொரோனாத் தொற்று தொடர்பாக நாட்டின் அனைத்து மக்களும் விழிப்புடன் இருக்க வேண்டும். அடுத்த சில வாரங்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும்.

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றானது ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. அத்தோடு எதிர்வரும் வார நாட்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். இதனிடையே, நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைப்போல், சுகாதார ஊழியர்களின் குடும்பங்களிடையே தொற்று நோய் பரவி வருகின்றது. அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்குத் தடுப்பூசி போடுவதில் சுகாதார அமைச்சு முன்னுரிமை வழங்க வேண்டும்" என்றார். (ம-03)

# 1,000 ஐக் கடந்த கொரோனா மரணங்கள்

## மேலும் 34 பேர் உயிரிழப்பு

நாட்டில் நேற்று 34 கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதுவே இலங்கையில் நாளொன்றில் பதிவான ஆகக்கூடிய கோவிட் மரண எண்ணிக்கையாகும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் பதிவான மொத்த கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 1015 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)


# கொரோனாவால் பாதிக்கப்பட்டு ஒரேநாளில் உயிரிழந்த இரட்டை சகோதரர்கள்

(டில்லி)

உத்தரபிரதேசத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட 24 வயதான இரட்டைச் சகோதரர்கள் ஒரே நாளில் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரேமண்ட் ரபேல் - சோஜா தம்பதிக்கு கடந்த 1997ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தது.

ஜோஃப்ரெட் வர்கீஸ் கிரிகோரி (Joefred Varghese Gregory) மற்றும் ரால்பிரட் ஜார்ஜ் கிரிகோரி (Ralfred George Gregory) என பெயர் கொண்ட அந்த மாற்றான் சகோதரர்கள் இருவரும் ஒரே மாதிரியாக கணினி பொறியியல் படித்துவிட்டு, ஹைதராபாத்தில் பணிபுரிந்து வந்துள்ளனர்.



இந்த நிலையில் கடந்த மாதம் 24 ஆம் திகதி ஒரே நாளில் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. தொடர்ந்து உடல்நிலை மோசமானதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இரட்டையர்கள் இருவரும் அடுத்தடுத்து உயிரிழந்தனர். (ம-03)

# யாழ்ப்பாணப் பல்கலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## பல்கலை காவலாளிகள் கைதாகி வாக்குமூலம் வழங்கிய பின்னர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காவலாளிகளிடம் வாக்குமூலம் பெற்ற பின்னர் கோப்பாய் பொலிஸார் அவர்களை விடுவித்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்கும் முகமாக நேற்று முன்தினம் முதல் பல்கலை சூழலில் இராணுவத்தினர், பொலிஸார், புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு கண்காணிப்புக்கள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் தடைகள், கண்காணிப்புக்களை மீறி பல்கலைக்கழக வளாகத்தினுள் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி முன்பாக மாணவர்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதனை அடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காவலாளிகள் இருவரை கோப்பாய் பொலிஸார் வாக்குமூலம் பெறுவதற்காக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். பின்னர் பல்கலைக்கழக நிர்வாகம் ஊடாக கடமையில் இருந்த மேலும் மூவரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்திருந்தனர்.

பொலிஸ் நிலையத்தில் காவலாளிகள் ஐந்து பேரிடமும் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அவர்களிடம் வாக்குமூலம் பெற்றுக் கொண்ட பின்னர் அவர்களை நேற்று இரவு விடுவித்தனர். (ம-03,33)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 31 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

சீதனம் எதிர்ப்பார்க்கப்படவில்லை.

(6878)

தொடர்பு

075 883 0107

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-2174)

077 436 6704, 077 179 1963

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி

(C-2133)

0768226240 DHL

## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

EXPRESS Courier Service

3-6 நாட்கள்

லண்டன் 1000/= (C-2134)

070 3305500
077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## சிறுநீரகம் தேவை

32 வயதுடைய A+ குருதி வகையைச் சேர்ந்த ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு A+ அல்லது A-, O+ அல்லது O- வகையை உடைய சிறுநீரகத்தைத் தானமாக வழங்கக்கூடியவர் தொடர்பு கொள்ளவும். (6858)

தொடர்புக்கு :
Sanju
076 531 4995
075 576 0264

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட ( யாழ். நகரில் இருந்து 11/2 Km தூரம் ) ஒட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கையில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
( 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 6 இலட்சம்.
(6904)

077 288 0152
077 235 2656
074 075 4204

## காணி விற்பனை

யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தில் முதலாம் ஒழுங்கையில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு.
( 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும்
( யாழ். - மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரத்தில்)
(6904)

076 221 2037
077 203 6402


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.